கண் வைத்திய நிபுணர்கள்
சோதனை செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3.00

OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 14 ஞாயிற்றுக்கிழமை (27 – 03 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 120

# வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் செய்வோம்

## மோதலைத் தொடர்வது பண லாபத்துக்காகவே

### பி. பி. ஸி.க்கு சந்திரிகா நேற்றுப் பேட்டி

கொழும்பு மார்ச் 27

நாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கு-கிழக்கு யுத்தத்தை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் செய்வோம். இந்த யுத்தத்தினால் பலருக்கு பணலாபம் கிடைப்பதால் அரசாங்கம் இதனைத் தொடர விரும்புகிறது. வடக்கில் வாழும் தமிழர்களில் பெரும்பாலானோர் பயங்கரவாதிகள் அல்லர் என்று நாம் நம்புகின்றோம். தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஆலோசனைகளை முன்வைக்க அரசு தவறி விட்டதால் தான் அவர்கள் இன்று இந்த நிலையில் இருக்கிறார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டங்களைத் தருவோம்.

இப்படி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோவிடம் தெரிவித்தார்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேலும் சொன்னதாவது:

நாடு இன்று எதிர்நோக்கியுள்ள பாரிய பிரச்சினை இனப்பிரச்சினை தான்.

தென் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் இதனை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையாகக் குறிப்பிட்டது. ஆனால் பெரும்பான்மை மக்கள் அரசின் இந்த நிலைப்பாட்டை ஏற்கவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசிடம் தெளிவான திட்டம் எதுவும் கிடையாது. அப்படியான ஒரு திட்டத்தை அரசு சமர்ப்பிக்காததாலேயே வடக்கு — கிழக்கு மக்கள் தீவிரவாதத்தின் மத்தியில் வாழவேண்டியுள்ளது.

நாம் ஆட்சிக்கு வந்ததும் அரச மட்டத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வுகளை தெளிவாகச் சமர்ப்பிப்போம். அவை பற்றி தமிழ் மக்களுடன் கலந்துரையாடி அவர்களை இணங்க வைக்க முயற்சிப்போம்.

இவ்வாறு செய்வதன் மூலமே யுத்தத்தை நிறுத்த முடியும். யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதால் எவராலும் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இந்த யுத்தத்தை என்றுமே நிறுத்தமுடியாது. அரசின் சில சகாக்களுக்கு இந்த யுத்தம் பெரும் வியாபாரமாகியுள்ளதே இதற்குக் காரணமாகும்.

—இவ்வாறு திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

(இ-எ-6)

## நரோமா புறப்பட்டது

வடமராட்சி, மார்ச் 27

ஈழ அகதிகளை ஏற்றிக்கொண்டு நேற்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்த நரோமா கப்பல் நேற்றைய தினமே நோயாளர்கள் மற்றும் அரச பணியாளர்கள் உட்பட 93 பேரை ஏற்றிக்கொண்டு திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது. (இ-173-87)

## திருவிழாவையொட்டி விசேட படகுச் சேவை

### இன்றும் நாளையும் நடைபெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 27

புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமையும், நாளை திங்கட்கிழமையும் வழமையான நேரத்தில் நடைபெறும்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் நேற்று இதனை அறிவித்துள்ளனர். (இ-5)

## தென்மாகாண தோல்விக்கு விஜேதுங்காவே காரணம்

### ஐ. தே .க. வட்டாரங்கள் கருத்து

கொழும்பு, மார்ச் 27

தென்மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்விக்கு ஜனாதிபதி விஜேதுங்காவே முக்கிய காரணம் என்று ஐ. தே. க வட்டாரங்கள் கருதுகின்றன.

ஜனாதிபதிக்கு எதிராக அவரது கட்சிக்குள்ளே குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன என்றும் —

அக் கட்சியில் உள்ள உட்பூசல் மேலும் விரிவடையும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் ராவய ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

## திருமலையில் புதிதாக சிங்களக் குடியேற்றம்

திருகோணமலை, அம்பாறைப் பகுதிகளில் பல்லாயிரக் கணக்கான சிங்களவர்கள் புதிதாகக் குடியேற்றப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு அரச காணிகள், வீடுகள் அமைக்க நிதி, நிவாரண உதவிகள் அரசினால் தாராளமாக வழங்கப் பட்டு வருகின்றன.

அரசின் திட்டமிட்ட இந்த நடவடிக்கையினால் தமிழர் மத்தியில் அச்ச உணர்வு நிலவி வருகிறது என்று கூறப்படுகிறது. [இ]

## வாக்குச் சீட்டுக்களை மக்களே பாதுகாத்தனர்

### தேர்தல் குறித்து விக்ரர் ஐவன்

இலங்கையின் வரலாற்றிலேயே முதன் முறையாக மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தியதோடு அல்லாமல், பயன்படுத்திய வாக்குகளை பாதுகாத்துக் கொள்வதிலும் ஈடுபட்டதை தென் மாகாணசபைத் தேர்தலில் காணக் கூடியதாக இருந்தது.

ராவய ஆசிரியர் விக்ரர் ஐவன் பி.பி.ஸிக்கு இவ்வாறு தெரிவித்தார்.

இத் தேர்தல் திசிரமக்கள் போராட்டமாக பரிணமித்துள்ளது. அரசின் வன்செயல்களை மக்கள் முன்னர் பார்த்துக் கொண்டிருந்தனர். இம் முறை மக்கள் முற்றிலும் மாறுபட்டு செயற்பட்டுள்ளனர்.

அரச குண்டர் குழுக்கள் தங்கியிருந்த தோட்டப் பங்களாக்களை மக்கள் சுற்றிவளைத்து, அவர்களை வெளியேற்றியுள்ளனர்.

முன்னைய தேர்தலின் போது தங்களுக்குப் பாதகமான பகுதிகளில் உள்ள மக்களை அச்சுறுத்தி அவர்களை வாக்களிக்காமற் செய்வதில் அரசியல்வாதிகள் ஈடுபட்டு வந்தனர். இம் முறை அரச தரப்பினர் அத்தகைய முறைகேடுகளில் ஈடுபட முயற்சித்தனர். ஆனால் அந்த முயற்சியை மக்கள் தோல்வியுறச் செய்தனர் என்றும் விக்ரர் ஐவன் தெரிவித்தார். (இ-எ-6)

## பொறியியல், முகாமைத்துவ வெட்டுப்புள்ளிகள் குறைப்பு

### மருத்துவத் துறைக்கு அதிகரிப்பு

1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் 1993 — 94 கல்வியாண்டுக்கு 8,801 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது என்று பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு முடிவு செய்துள்ளது.

ஆணைக்குழு வெளியிட்டுள்ள வெட்டுப்புள்ளிகளின்படி — பொறியியல், முகாமைத்துவம் துறைகளுக்கான வெட்டுப்புள்ளிகள் குறைக்கப்பட்டுள்ளன. மருத்துவத்துறைக்கான வெட்டுப்புள்ளிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இம் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்படும்போது பல்கலைக் கழக அனுமதிக்காகக் காத்திருந்த மாணவர்களின் பிரச்சினை தீர்ந்து விடும் என்று பல்கலைக் கழகங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் விஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

புதிய மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் எதிர்வரும் மே மாதம் ஆரம்பமாகும்.

மருத்துவத்துறை மாணவர்களுக்குக் கூடுதலான இடம் கிடைக்கக் கூடிய வகையில் சகல மருத்துவ பீடங்களிலும் உள்ள கிளினிக்கல் பயிற்சி வசதிகள் ஆய்வுகூட வசதிகள் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்கு சகல முயற்சிகளும் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

1993 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடந்த ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் மொத்தமாக 180 புள்ளிகளைப் பெற்றுள்ள மாணவர்களை பல்கலைக் கழகங்களில் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் அடுத்தமாதம் கோரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1993 — 94 ஆம் ஆண்டுக்கு பல்கலைக் கழக அனுமதி பெற விண்ணப்பித்துள்ள மாணவரின் எண்ணிக்கை 26,438 என்றும் அவர் கூறினார். (இ-எ)

## தேசிய பாதுகாப்புப் படையின் 8 பட்டாலியன்கள் வடக்கே

தேசிய பாதுகாப்புப் படையில் இருந்து மேலதிகமாக எட்டு பட்டாலியன்கள் படைத்தலைமையகத்தினால் வடக்கே அனுப்பப் பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் இருந்து ஏற்கனவே 10 ஆயிரம் துருப்புக்கள் வடபகுதி முகாம்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டிருப்பது தெரிந்ததே.

தேசிய பாதுகாப்புப் படையில் மொத்தம் 14 பட்டாலியன்கள் உள்ளன.

வடக்கே 8 பட்டாலியன்கள் அனுப்பப்பட எஞ்சிய 6 பட்டாலியன்களும் கிழக்கில் நிலை கொண்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஈழ அகதிகள் 56 பேருடன் “நரோமா” வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 27

தமிழ் நாட்டில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட ஈழத் தமிழ் அகதிகள் 56 பேரை ஏற்றிக் கொண்டு ‘நரோமா’ கப்பல் நேற்றுக் காலை 7-00 மணியளவில் பருத்தித்துறையை வந்தடைந்தது.

பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உட்பட 19 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நேற்று வந்து சேர்ந்தனர்.

86 குடும்பங்களைச் சேர்ந்த 114 பேர் முதலில் அந்தக் கப்பலில் வர ஏற்பாடாகி இருந்தது.

ஆனால் அகதிகள் தம்முடன் தமது பொருள்களை பெருமளவில் எடுத்து வந்ததை அடுத்து கப்பலில் இடநெருக்கடி ஏற்பட்டதால் அவர்களில் ஒரு பகுதியினரே பயணம் செய்ய முடிந்தது. எஞ்சியோர் விரைவில் கப்பல் மூலம் இங்கு வருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இங்கு வந்து சேர்ந்தவர்களில் அதிகமானவர்கள் யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

மிகவும் களைத்த நிலையில் வந்து சேர்ந்த அவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் உணவு வழங்கி உபசரித்தனர். பின்னர் அவர்கள் சொந்த இடங்களுக்கு வாகன மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

திருமலையில் இருந்து அகதிகளுடன் கப்பலில் வந்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரி திரு. றொபேட் ஸிலிப் நேற்று முற்பகல் யாழ். வந்தார். இங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் நேற்று நண்பகலே அவர் இங்கிருந்து திரும்பினார்.

சுமார் ஏழு மாதங்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பிறந்த மண்ணில் போல எங்குமே வாழ முடியாது

### திரும்பிய அகதிகள் பேட்டி

வடமராட்சி, மார்ச். 27

“எங்கள் பிறந்த மண்ணில் வாழ்வது போல எங்குமே வாழமுடியாது என்பதை இந்தியாவிலான எமது அகதி வாழ்க்கை காட்டியுள்ளது. எத்தகைய துன்பங்கள் வரினும் இந்த மண்ணிலேயே வாழ்வதில்தான் சந்தோஷமும் திருப்தியும் உண்டு”

இந்தியாவிலிருந்து வந்து வவுனியா சிதம்பரம் அகதி முகாமில் வசித்து விட்டு நேற்று இங்கு வந்து சேர்ந்த குருநகரைச் சேர்ந்த மிக்கேல் மரியநாயகம் (49 வயது) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டபின்னரும் ஜெயலலிதா ஆட்சி ஏற்பட்ட பின்னரும் நாம் பல பாகு பாடுகளையும் அடக்குமுறைகளையும் அனுபவித்தோம்” என்றும் அவர் கூறினார்.

இவரைப் போலவே மீண்டும் திரும்பிய குருநகரைச் சேர்ந்த அன்ரன் பொன்னையா (வயது 34), புலோலி கிழக்கைச் சேர்ந்த தங்கராஜா ஆகியோரும் சொந்தமண்ணுக்குத்திரும்பியமை ஒட்டித் தாம்பெரிதும் மன அமைதி அடைவதாக உதயன் செய்தியாளரிடம் கூறினார்கள்.

## முச்சந்தி முரளி



மண் வாசனை இப்பதான் டரியுது போல பாருங்கோ...!

## தொடக்கவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய சேர் பொன் இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனத்தின் தொடக்க விழா இன்று காலை 9.00 மணியளவில் நடைபெறும்.

இந் நிறுவனத்தை துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கி வைப்பார்.

## தெற்கில் இரவு நேர ஊரடங்கு

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் நேற்று மாலை 6 மணி முதல் இன்று காலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மட்டக்களப்பில்

## விவசாயம் செய்வதற்கு தமிழருக்கு அனுமதி மறுப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாயம் செய்வதற்கு படையினர் தடை விதித்த காணிகளில் முஸ்லிம்கள் பட்டும் விவசாயம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய காணிகளில் விவசாயம் செய்வதற்கு தமிழர்களுக்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை.

அதே சமயம், தமிழர் மீதான கெடுபிடிகளும் மட்டக்களப்பில் அதிகரித்து வருகின்றன. (இ)

## இனவாத பேச்சால் சிங்களவரை இனியும் ஏமாற்றிவிட முடியாது

### பி. பி. ஸி. கொழும்புச் செய்தியாளர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 27

“சிங்களவர்களைத் தமிழர்களுக்கு எதிரான சுலோகங்களினால் இலகுவில் ஏமாற்ற முடியும் என எண்ணிக்கொண்டிருந்த சிங்கள அரசியல்வாதிகளுக்கு தென்மாகாணச் சிங்கள மக்கள் சாட்டையடி கொடுத்துள்ளனர்.

“அவ்வாறே வடக்குத் தமிழர் மத்தியில் தங்கள் சிங்கள சகோதரர்கள் குறித்து தவறான எண்ணம் இருப்பின் அதனை மாற்றிக்கொள்வதற்கு இது நல்லதோர் சந்தர்ப்பம் ஆகும்.

பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ தமது கண்ணோட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சில அரசியல்வாதிகள் தான் இனவாதிகளாக இருக்கிறார்களே அன்றி சாதாரண சிங்கள மக்கள் இனவாதிகள் அல்லர் என்பது தற்போது தெளிவாகி உள்ளது.

வன்செயல் மூலம் தேர்தல் முறைகேடுகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுக்கும் ஆற்றல் மக்களுக்கு மட்டுமே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜேஷ் பைலட் சென்ற வாகன அணி மீது தாக்குதல்

### காஷ்மீரில் சம்பவம்

ஸ்ரீநகர், மார்ச் 27

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் சென்று கொண்டிருந்த வாகன அணி மீது காஷ்மீர் பிரிவினைவாதிகள் நேற்று தாக்குதல் நடத்தினார்கள்.

குண்டு துளைக்காத காரில் சென்ற இணை அமைச்சரும் அவருடன் கூடச் சென்ற முன்னாள் மாநில முதலமைச்சர் பரூக் அப்துல்லாவும் இச்சம்பவத்தின்போது காயம் இன்றித் தப்பினார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

இச் சம்பவத்தின் போது அமைச்சருடன் கூடச் சென்று கொண்டிருந்த பரா இராணுவ அதிகாரிகள் எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள். இச்சண்டை ஆறு நிமிடங்கள் நீடித்தது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பாணன்குளம் நாச்சியம்மன் ஆலய

## வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

13 ஆம், 14 ஆம், 15 ஆம் திருவிழாக்களும் பூங்காவனமும்

**27-3-1994** ஞாயிறு சப்பறம் மாலை 6 மணி
**28-3-1994** திங்கள் - தேர்

ஆரோகணித்தல் - காலை 7-30 மணி
அவரோகணித்தல் முற்பகல் 10 மணி
பிராயச்சித்த அபிஷேகமும் நவசக்தி அர்ச்சனையும் முற்பகல் 11 மணி

**29 3-1994** செவ்வாய் தீர்த்தம் காலை 9 மணி
கொடியிறக்கம் மாலை 4 30 மணி

**30-3-1994** புதன் பூங்காவனம் மாலை 5 மணி

குறிப்பு:

31-3 1994 வியாழன் அன்று காலை 9.00 மணிக்கு சங்காபிஷேகமும் விசேஷ மேளக்கச்சேரியும் மாலை 4.30 மணிக்கு வைரவர்சாந்தியும் இடம்பெறும்.

**1-4-1994** வெள்ளி பகல் 12.00 மணிக்கு அன்னதானம்

= ஆலய பரிபாலன சபை =

கச்சேரி நல்லூர்வீதி,
யாழ்ப்பாணம். (சி-30096)



## ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தின் மாபெரும் சுற்றுப் போட்டி - 1994

கரப்பந்தாட்டம் (Set up) (Over)
கிரிக்கெட் (மென்பந்து)
(11 வீரர்கள் கொண்ட 20 ஓவர்கள்)

முடிவு திகதி: 15-04-1994

விண்ணப்பக் கட்டணம்: 100/- ரூபா மட்டும்

கரப்பந்தாட்ட அரை இறுதி/இறுதி ஆட்டங்கள் யாவும் மின்னொளியில் நடைபெறும்.

கீழ்வரும் முகவரியில் உங்களுக்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

E. S பியதாச, 46/2, 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

விளம்பர அன்பளிப்பு:
**விஜிதா கபே,**
பிரதான வீதி, யாழ்ப்பாணம்
((30097)



## யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

திருநெல்வேலி

### சாரணர் பரிசளிப்பு விழா-1994

இடம்: யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
காலம்: 27 - 03 - 1994 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணி

தலைவர்: திருமதி க. சிதம்பரநாதன், அதிபர் யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

பிரதம விருந்தினர்:
வைத்திய கலாநிதி, பூ. உரோமகேஸ்வரன் (மாகாண ஆயுள்வேத பணிப்பாளர்)
வட கிழக்கு மாகாண சுகாதார மகளிர் விவகார அமைச்சு

கௌரவ விருந்தினர்:
திரு. இ மகேந்திரன் (மாவட்ட ஆணையாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. இ. இளங்கோவன் (உதவி அரசாங்க அதிபர், நல்லூர்)
திரு த. சித்திரவேல் (பிரதேச உதவிப் பணிப்பாளர் அகில இலங்கை உலகெயர்)
திரு. இ ராஜ்குமார் (யாழ். மாவட்ட உதவிச்சாரணர் ஆணையாளர் இணைப்பாளர்-சாரணர், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பெண்கள் வழிகாட்டிப் பிரிவு)
திரு. வே. சிற்சபேசன் (யா/வர்த்தக சங்கத்தலைவர்)

யாழ். மாவட்ட சாரணர் உயர் உத்தியோகத்தர்கள், திரிசாரணிர்கள், சாரணத் தலைவர்கள், குருளைச் சாரணர் தலைவர்கள், சாரணர்கள், சாரணிய வழிகாட்டிகள், சாரணிய அபிமானிகள் அனைவரையும் கௌரவ விருந்தினராக அழைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ★

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,
திருநெல்வேலி.

விளம்பர அன்பளிப்பு:
அக்குறோ பொறியியல் இயந்திர திருத்துநர்,
நீதிமன்ற வீதி (கிராமசபை முன்) மல்லாகம்.
ஆரணி உணவகம்.
பிரதான வீதி, மல்லாகம்.
[சி-7614]


# 'மழலைகள் பூங்கா'க்களில் வளரும் சாதனை படைக்கும் நாளையசந்ததி!

செஞ்சோலை இல்லத் திறப்பு விழாவிற்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் இர்க்கதரீ சனத்துடன் கூடிய தனது எண்ணத்தை வெளியிட்டிருந்தார்.

''செஞ்சோலை இல்லம் ஒரு புரட்சிகரக் கல்வியின் பரிசோதனைக் களமாக அமைய வேண்டும். மண் பற்றும் மக்கள் பற்றும் கொண்ட ஒரு புதிய அறிவுகள் பரம்பரையை உருவாக்கித் தர வேண்டும். சுபீட்சகரமான தமிழீழ சமுதாயத்தைப் படைக்கும் தேச நிர்மாணிகளாகத் தோற்றுவிக்க வேண்டும்''—இவ்வாறு தேசியத் தலைவர் அச்செய்தியில் தெரிவித்திருந்தார்.

அவரது எண்ணக்கரு தமிழீழ விடுதலைப்புலிகள் மாவட்ட அரசியல் துறையின் மேற்பார்வையில் — சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவாக செயலுருப் பெற்றுள்ளது.

### பத்து இடங்களில் ..

ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடுத்துள்ள யுத்தத்தினாலும், பொருளாதாரத் தடையினாலும் எதிர்காலச் சிற்பிகளான எமது மழலைகள் இன்று பல வழிகளில் நலிவடைந்துள்ளனர். இதனைப் போக்க உதவிக்கரம் நீட்டும் சிறுவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒன்பது இடங்களில் இப்பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிறுப்பிட்டி, சுன்னாகம், நாவற்குழி, கைதடி, உடுப்பிட்டி, பொம்மைவெளி, நவாலி, கோப்பாய், கரவெட்டி ஆகிய இடங்களில் இச்சிறுவர் பூங்காக்கள் இயங்கி வருகின்றன. பத்தாவது பூங்கா, விரைவில் கரவெட்டி, ராஜ கிராமத்தில் அமைக்கப்படவிருக்கிறது.

மழலைகளின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வரும் இப்பூங்காக்களில் இரண்டைச் சென்று பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது

### சுன்னாகம் பூங்கா

யாழ். அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, இச்செயற்திட்டத்துக்குப் பொறுப்பான சுது ஆகியோருடன் சுன்னாகம் வெள்ளை வீதியில் அமைந்துள்ள பூங்காவுக்குச் சென்றேன்.

அமைதியான சூழ்நிலையில் பூத்துக் குலுங்கும் வண்ண, வண்ணப் பூக்கள் மத்தியில் அமைந்திருந்தது அந்த மழலைகள் பூங்கா.

படிப்பது, சாப்பிடுவது, ஓய்வு, சமையல் — இவற்றுக்கு என்று தனித்தனி கூடங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. விளையாட்டரங்கும் முதலுதவி நிலையமும் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. பூங்காவின் நுழைவாயிலில் ஒவ்வொரு பிரிவுக்கு செல்ல வழிகாட்டும் படம் வைக்கப்பட்டுள்ளது.

### காலை முதல் மாலை வரை

காலை 7-30 மணிக்கு சிறார்கள் பூங்காக்கு வருவார்கள். முதலில் உடற்பயிற்சி, பின்னர் காலை உணவு வழங்கப்படும். அதன் பின்னர் அவர்களது சுத்தம் பார்க்கப்படும். பிறகு, மாணவர்கள் தம்மைப் பற்றி, சூழலைப் பற்றி அறியும் போதனை இடம்பெறும். நற்பழக்கங்கள் போதிக்கப்படும். காலை 10 மணிக்கு பசும்பால் வழங்கப்படு[ம்.] பின்னர் சுய விளையாட்டு, கல்வி போதனை இடம் பெறும். மதிய உணவின் பின்னர் ஓய்வு (நித்திரை செய்தல்) மாலையில் சிற்றுண்டி, விளையாட்டு, மாலையில் உணவு அதன் பின்னர் நற்பழக்கங்கள் அவர்களுக்குப் போதிக்கப்படும். அதன்



வே. பிரபாகரன்

பிறகு அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

"2½ வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட சிறார்களே இப்பூங்காவில் சேர்க்கப்படுவார்கள்''— என்று கூறுகிறார் அங்கு பணிபுரியும் ஆசிரியை செல்வி வைரமுத்து சர்வநாயகி.

பெற்றோரை இழந்த, இடம்பெயர்ந்த, கஷ்டநிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் இந்த பூங்காவில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

பெற்றோர்கள் காலை 7 மணிக்கு தமிகள் குழந்தைகளை இங்கு கொண்டுவந்து விடுவர்; மாலை 5 மணிக்கு வந்து குழந்தைகளை கூட்டிக் கொண்டு போவர்.

குழந்தைகளின் நற்பழக்கம், சுத்தம், உடல் ஆரோக்கியம் ஆகியவற்றிலேயே முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. குழந்தைகளின் உடல் நிலை குறித்து நடமாடும் வைத்திய சேவையினரும் குடும்பநல அதிகாரிகளும் பரிசோதித்து ஒவ்வொரு குழந்தைக்கும் என்று வைக்கப்பட்டுள்ள தனித்தனி கொப்பிகளில் பதிவு செய்யப்படும்.

ஒவ்வொரு குழந்தையின் உடல்நிலை போசாக்குநிலை பற்றி ஆராய்ந்து அதற்கு ஏற்றவாறு உணவு மற்றும் மருந்துகள் வழங்கப்படும்.

### உணவு

இந்த நிலையத்துக்குத் தேவையான உணவு வகைகளைப் பொவசதிக பன்னி

**மாலவ தகன்**

ரண்டு பரப்பில் தோட்டம், பால்கெல இரண்டு மாடுகள் ஆகியன பராமரிக்கப்படுவதாக நிலையப்பொறுப்பாளர் திரு ஆர். விஜயரத்தினம் தெரிவித்தார்

வண்ணமலர்கள் நிறைந்துள்ள நந்தவனம் அருகே விளையாட்டரங்கு; பல்வேறு விளையாட்டுகளுக்குத் தேவையான உபகரணங்கள் அங்கு உள்ளன. நிலைய மாணவரின் கலைக்கதம்ப நிகழ்ச்சிகளை நடத்த அரங்கு ஒன்று நிர்மாணிக்கப்படுவதாகவும் அவர் கூறினார். மாணவரின் பெற்றோர்களையும் இக்கலைக்கதம்ப நிகழ்ச்சிகளுக்கு அழைக்க இருப்பதாகவும் அவர் கூறினார்.

### சிறுப்பிட்டி பூங்கா

''மாமா, வணக்கம்!''— என்று கூறி வரவேற்கின்றனர், சிறுப்பிட்டி சிறுவர் பூங்காவில் உள்ள மழலைகள்.

''பின்தங்கிய பகுதியான இங்குள்ள பெற்றோர் தனது குழந்தைகளை இப்பூங்காவில் சேர்க்க முதலில் பின்னடித்தனர்; இப்போது தமது குழந்தைகளைச் சேர்ப்பதற்கு அவர்கள் முண்டியடிக்கிறார்கள்''— என்று அங்குள்ள ஆசிரியை இ. மனோரஞ்சினி தெரிவிக்கிறார்.

பூங்காவில் படிக்கும் குழந்தைகள் மூலம் அவர்களின் பெற்றோர், மூத்த சகோதரர்கள் ஆகியோரின் வாழ்விலும் நல்ல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன குழந்தைகள் மட்டுமல்ல முழுக்கிராமமுமே மாற்றம் பெற்றுள்ளது'' என்றும் அவர் கூறுகிறார்.

சிறுப்பிட்டி பூங்காவில் விளையாட்டரங்கு, பாலர் கல்வி நிலையம் ஆகியனவற்றை சிரமதானம் மூலம் அமைக்கும் பணிக்கு அவ்வூர் மக்கள் உதவி வருகின்றனர்.

இதே வேளை— இப்பூங்காக்களில் சமையல் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊட்டச்சத்துமிக்க உணவுவகைகளை எப்படித் தயாரிப்பது என்பதில் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

சிறார்களின் அன்றாடக் கடமைகளைக் கவனித்து வரும் ஆசிரியைகளுக்கும் மேலும் பயிற்சியளிக்கும் திட்டமும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

### குறிக்கோள்

ஒவ்வொரு சிறுவரினதும் உடல், பொருள், செயல்திறன் நல்லொழுக்கம், சமூகப் பண்பு மற்றும் அழகுணர் ஆற்றல் ஆகியவற்றை வளர்ச்சியுறச் செய்தலே பூங்காவின் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

''ஏடு தூக்கும் சிறுவரே நாடு/காக்க எழுவீரே
.......................
.......................
நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப் போகிறோம்''—இவ்வாறு இப்பூங்காக்களில் மழலைகள் பாடும் பாடல் வரிகள் தமிழீழம் எங்கும் ரீங்காரம் செய்கின்றன. ★

## பாடசாலைகளில்

நாவாந்துறை றோ.க. வித்தியாலயத்தின் இல்ல தடகள விளையாட்டுப் போட்டி நாளை திங்கள் பிற்பகல் 2 மணிக்கு சென். மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

மயிலணி சைவமகா வித்தியாலய தமிழ் மன்றத்தினரின் ''அணி'' என்ற இதழின் வெளியீட்டு விழா அதிபர் திரு. துரைசிங்கம் தலைமையில் நாளை நடைபெறும். [த-89]

★ ★ ★

பாஷையூர், சென்! அன்ரனீஸ் றோ. க. மகளிர் வித்தியாலய வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் அருட் செல்வி மேரிகொஸ்கா தலைமையில் நடைபெறும். [த-51]

★ ★ ★

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு அதிபர் கந்தையா தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (த-117)

★ ★ ★

அச்சுவேலி மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று ஞாயிறுக்கிழமை அதிபர் திரு. க. இராசதுரை தலைமையில் நடைபெறும். (க-11)

## ரத்கம, ஹிக்கடுவ பகுதிகளில் மோதல்

தென் மாகாணசபைத் தேர்தல் தினத்தன்று ரத்கம, ஹிக்கடுவ பொலீஸ் பகுதிகளில் பல மோதல் சம்பவங்கள் இடம் பெற்றன என்றும் —

இம் மோதல்களில் ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் பொது மக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)


## முதலாவது பிறந்த தின வாழ்த்து

### செல்வன் தி. இளங்குமரன்

கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த மா. திருஞானசம்மந்தமூர்த்தி நாகேஸ்வரிதம்பதிகளின் செல்வப் புதல்வன் இளங்குமரன் இன்று [27-3-94] தனது முதலாவது பிறந்த தினத்தை விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் இளங்குமரனை பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

மா. திருஞானசம்மந்தமூர்த்தி
(நாதஸ்வரம்)

221/87, கச்சேரி நல்லூர் வீதி'
யாழ்ப்பாணம். (30104)



யாழ் கலட்டி

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயம் ஏக தின இலக்ஷார்ச்சனை விழா

27-03 94 ஞாயிறு பங்குனி உத்தர நன்னாள்
காலை 6. 15 மணிக்கு அபிஷேகம்
காலை 7.00 மூலஸ்தான பூசை
காலை 7.15 வசந்த மண்டப பூசையுடன் அர்ச்சனை ஆரம்பமாகும்
மாலை 6.00 மணிக்கு உற்சவமும் சுவாமி வீதி உலாவும் இடம்பெறும்

[30107] தேவஸ்தானம்



## முக்கிய அறிவித்தல்

நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

### பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும்

**28-03-1994** திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் சட்டநாதர் வீதி இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெறும்.

நல்லூர் பிரதேசத்தில் உள்ள அனைத்து வர்த்தகர்களையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம் ஒவ்வொரு வர்த்தகர்களின் வரவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நன்றி:
நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்.

[சி-7617]



## SHOTOKAN KARATE INTERNATIONAL FEDERATION (NORTHERN PROVINCE)

(யாழ்ப்பாணத்தில் இலங்கை அரசின் அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு கராட்டே நிறுவனம்)

பன்னிரண்டு (12) வருடகாலத்தின் பின் யாழ். நகரில் கறுப்புப் பட்டியும், சர்வதேச (Shotokan) சான்றிதழ்களும் வழங்கும் வைபவம்.

பிரதம விருந்தினர்:
திரு வே. நவரட்ணராஜா
(பதில் ஆணையாளர் யாழ். மாநகரசபை)

கறுப்புப் பட்டி பெறுவோர்:
(1) என். ஜெயஸ்ரீதரன் (யாழ். இந்துக்கல்லூரி, பழைய மாணவன்)
(2) S பரமேஸ்வரன் (பெரியபுலம் மகாவித்தியாலயம் பழைய மாணவன்)
(3) K யசிதரன் (யாழ். பல்கலைக்கழக மாணவன்)

இடம்:
**TYMHA** (திருநெல்வேலி சந்தி)

காலம்:
27-03-1994' மாலை 4 00 மணி

இவ்வைபவத்தில் கராட்டே கண்காட்சியும் இடம்பெறும், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**SENSEI** சு: தர்மராசா
(3ஆம் கறுப்புப் பட்டி)
(Chief Instructor and Examiner)
[30077)



## திருமண அழைப்பு

அன்புடையீர்;

நிகழும் ஸ்ரீமுக வருடம் பங்குனி மாதம் 14 ஆம் நாள் (27-03-94) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணி முதல் நண்பகல் 12 மணி வரையுள்ள சுபவேளையில்

கைதடிச் சந்தி
கந்தன் - சிறீதேவி
தம்பதிகளின் புத்திரன்
திருநிறை செல்வன்
**ஸ்ரீஸ்கந்தராசா**
அவர்களுக்கும்

திருநிறை செல்வி
**தங்கராணி** (பாப்பா)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் கொண்டு கைதடி கயிற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு ★ அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
கைதடி சந்தி, திருமதி கந்தன் (கார்த்தி)
கைதடி. துணைவி சிறீதேவி
(30106)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அய்டீட் - அலிமஹ்டீ ஒப்பந்தம் மூலம்
# சோமாலியாப் பிரச்சினையில் திருப்பம்!

சோமாலியாவின் போட்டிக் குழுக்களின் தலைவர்களான ஜெனரல் மொஹம்மட் பரா அய்டீட் (Mohammed Farah Aideed) ஜெனரல் அலி மஹ்டீ (Ali Mahdi) ஆகிய இருவருக்கும் இடையில் கென்யாவின் தலைநகரான நைரோபியில் வியாழக்கிழமை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான சோமாலிய மக்களின் மரணத்துக்குக் காரணமாக இருந்த சோமாலியாவின் உள்நாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும்—

தற்போது எஞ்சியுள்ள ஐ.நா. அமைதிகாக்கும் படைகள், குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே சோமாலியாவில் இருந்து வெளியேறவு— இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

தலைநகர் மொகடிஸுவில் இருந்து கடைசி அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறிக் கொண்டிருந்த சமயம் நைரோபியில் இரு போட்டிக் குழுக்களின் தலைவர்களும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொண்டனர். சோமாலிய மக்களின் தியாகங்களுக்கு கிடைத்த பரிசு இது.

அய்டீட்டுக்கும் அலிமஹ்டீக்கும் இடையில் செய்து

## வெளி உலகம்

கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இரு தரப்பினரும் தமது ஆயுதங்களைக் களைந்து யுத்தநிறுத்தம் ஒன்றுக்கு இணங்கி உள்ளனர்.

தலைநகர் மொகடிஸுவில் தேசிய இணக்க சபை ஒன்று ஏற்படுத்தப்படும்.

ஜனாதிபதி, உபஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்களை இந்தச்சபை நடத்தும்.

ஐ.நா. தலைமையின் கீழ் நைரோபியில் இருவார காலம் நடைபெற்ற மத்தியஸ்த முயற்சியின் விளைவாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் அய்டீட்டைப் பிடிப்பதற்காக பெரும் போர் ஒன்றையே நடத்திய ஐ.நா. அமைதி காக்கும் படைகள், அந்த முயற்சியில் தோல்வி கண்ட பின்னர் அய்டீட்டுடன் இணக்க நிலை ஒன்றை உருவாக்குவதில் வெற்றி கண்டுள்ளன.

அய்டீட்டைப் பிடிப்பதாகக் கூறிக்கொண்டு, நடத்தப்பட்ட தாக்குதல்கள் ஆயிரக்கணக்கான அப்பாவி சோமாலிய மக்களைப் பலிகொண்டன.

இது ஐ.நா.வின் வரலாற்றில் கறைபடிந்த அத்தியாயங்களாகிவிட்டது.

சுமார் 40க்கு மேற்பட்ட நாடுகளில் தற்போது செயலாற்றி வரும் ஐ.நா. அமைதிப்படைகளின் பணிகளையும் இச்சம்பவம் மாசுபடுத்திவிட்டது.

கடந்த வெள்ளியன்று கடைசி அமெரிக்கப்படைகளும் சோமாலியாவில் இருந்து வெளியேறிவிட்டன. அமைதிப்படையில் தற்போது அமெரிக்க வீரர் எவரும் இல்லை.

சோமாலியாவில் தற்போது 28 ஆயிரம் ஐ.நா. அமைதி

## அமெரிக்கா விட்ட பெரிய தவறு
## அய்டீட்டை பிடிக்க முயன்றதே

காக்கும் படையினர் இருந்து வருகின்றனர். இவர்களில் 20 ஆயிரம் பேர்வரை இந்தியாவையும், பாகிஸ்தானையும் சேர்ந்தவர்கள். ஏனையோர் பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

நைரோபியில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் சோமாலியாவில் அமைதி நிலை ஏற்பட்டவுடன் இப்படைகளும் வெளியேறிவிடும்.

ஐ.நா. அமைதிப்படையினருக்கு சவாலாக இருந்து வந்த அய்டீட்டைப்பிடிப்பது மூலம் சோமாலியாப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அமெரிக்கா முதலில் முயன்றது.

அதில் தோல்விகண்டதை அடுத்து அய்டீட்டுடன் சமரசம் செய்துகொள்ள கடந்த சில மாதங்களாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தும்படி அய்டீட் விடுத்த வேண்டுகோளை ஐ.நா. அமைதிகாக்கும்படைகள் ஏற்றுக்கொண்டன.

போட்டிக் குழுக்களின் ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகளை நிறுத்தி நிவாரணங்களை அனுப்பும் மனிதாபிமான நடவடிக்கைகளை மட்டும் ஐ.நா. அமைதிகாக்கும் படைகள் மேற்கொள்ள ஆரம்பித்தன.

இந்த நடவடிக்கை ஐ.நா. அமைதிகாக்கும் படைகளுக்கும் அய்டீட்டுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்த வழிவகுத்தது.

அமைதிகாக்கும் படையில் அங்கம் வகித்த அமெரிக்கப் படைகளினால் கைதுசெய்யப்பட்ட அய்டீட்டின் மிகநெருங்கிய சகாக்கள் சிலர் விடுதலை செய்யப்பட்டனர்.

இப்படியான ஒரு சுமுகமான சூழ்நிலையே படிப்படியாக வலுவடைந்து தற்போது நைரோபியில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு ஒப்பந்தம், தென் ஆபிரிக்க ஒப்பந்தம், வட அயர்லாந்து ஒப்பந்தம், கம்போடிய ஒப்பந்தம், ஆப்கானிஸ்தான் ஒப்பந்தம் போன்று சோமாலியா ஒப்பந்தமும் செயல் உருப்பெறுவதற்கு இன்னும் எத்தனையோ தடைகளைத் தாண்ட வேண்டி இருக்கலாம்.

### 1992இல் அ.மெ. தலையீடு

1992ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சோமாலியாவில் அமெரிக்கப்படைகளின் நேரடித் தலையீடு முதல் தடவையாக ஏற்பட்டது.

சோமாலியாவை நீண்ட காலம் ஆட்சிசெய்த சர்வாதிகாரியான ஜனாதிபதி சையட் பாயரே (Siad Barre) பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் சோமாலியாவில் ஏற்பட்ட அதிகாரப் போட்டியே அமெரிக்காவின் தலையீட்டுக்கு வழி வகுத்தது.

சையட் பாயரே கவிழ்க்கப்பட்ட பின்னர் அலி மஹ்டீ தன்னை ஜனாதிபதியாகப் பிரகடனம் செய்தார். இதனை சோமாலியாவின் மற்றொரு பலம் வாய்ந்த தலைவரான அய்டீட் எதிர்த்தார். இருவரும் இராணுவ உயர் அதிகாரிகள்.

இந்த அதிகாரப் போராட்டத்தில் இந்த இருவரும் ஆயுதங்களைக் குவித்துக்கொண்டு பெரும் யுத்தம் ஒன்றையே நடத்தினார்கள்.

நாட்டின் முழு நிர்வாகமும் சீர்குலைந்தது. அத்துடன் சேர்ந்து வரட்சியும் பஞ்சமும் ஏற்பட்டன. கட்டுப்படுத்த முடியாதவாறு தொற்று நோய்களும் பரவின. இந்த யுத்தத்தின்போது முழுநாடும் சீரழிந்து கொண்டிருந்தது.

பசியினாலும், நோய்களினாலும் போட்டிக் குழுக்களின் தாக்குதல்களினாலும் மூன்று லட்சம் சோமாலியர்கள் வரை உயிரிழந்தனர்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர், எந்த ஒரு நாட்டிலும் தலையிடும் 'புதிய உலக ஒழுங்கு' முறையின்கீழ் அதிகாரத்தை எடுத்துக் கொண்ட அமெரிக்கா 1992 டிசம்பரில் சோமாலியாவுக்கு தனது படைகளை அனுப்பியது.

இந்த நடவடிக்கைக்கு அப்போது சர்வதேச தகவல் தொடர்புச் சாதனங்களில் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பசியாலும் பட்டினியாலும் மடியும் சோமாலியர்களின் இரட்சகர்களாக அப்போது அமெரிக்கப் படைகள் வர்ணிக்கப்பட்டன.

அமெரிக்காவின் கைப்பொம்மையாக தற்போது இருந்து வரும் ஐ.நா. பாதுகாப்புச்சபையும் அமெரிக்கப் படைகள் சோமாலியாவுக்கு அனுப்பப்பட்டதை அப்போது அங்கீகரித்தது. பின்னர் அமெரிக்கப்படைகளின் இடம் ஐ.நா. அமைதி காக்கும் படைகளினால் நிரப்பப்பட்டது. ஐ.நா. அமைதி காக்கும் படையில் பிரதான பங்கு வகித்ததும் அமெரிக்கப்படைகளே.

### ஐ.நா. படைக்கு எதிர்ப்பு ஏன்?

அமெரிக்கப்படைகள் வந்தபோது அய்டீட் அதனை முதலில் ஆதரித்தார்.

சில மாதங்களின் பின்னர் அமெரிக்கப்படைகள் வெளியேறின. அமெரிக்கப் படைகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஐ.நா. அமைதி காக்கும் படை சோமாலியாவுக்கு அனுப்பப்பட்டது.

இந்த நிலையில் ஐ.நா. அமைதி காக்கும் படைகளை அய்டீட் ஆதரவுப் படைகள் எதிர்க்க முற்பட்டன.

ஐ.நா. பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கும் (Boutros Boutros Ghali) அய்டீட்டுக்கும் இடையிலான பழைய கசப்பு உணர்வு ஒன்றே அய்டீட்டை சந்தேகக் கண் கொண்டு பார்க்க வைத்தது.

பூட்ரஸ் பூட்ரஸ் காலி எகிப்திய வெளிவிவகார அமைச்சராக இருந்த காலத்தில் சோமாலியாவில் அய்டீட்டின் எதிர்க் கோஷ்டிக்கு எகிப்து ஆதரவு வழங்கி இருந்தது என்று கூறப்படுகிறது.

ஐ.நா. அமைதிப் படைகளை அய்டீன் ஆதரவுப் படைகள் எதிர்க்க முற்பட்டதற்கு நம்பிக்கையீனமும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரோந்து சென்ற ஐ.நா. அமைதிப்படைகள், அய்டீட் ஆதரவுப் படைகளின் தாக்குதல்களுக்கு உள்ளான சம்பவங்கள் அதிகரிக்க ஆரம்பித்தன. அமைதிப் படையைச் சேர்ந்த அமெரிக்கர்கள், பாகிஸ்தானியர்கள் உட்பட பல நாட்டவர்கள் கொல்லப்படும் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தன.

### அய்டீட்டை பிடிக்கும் தவறான போக்கு

சோமாலியாவில் ஐ.நா. அமைதிப்படை வீரர்கள் கொல்லப்படுவதற்கு அய்டீட்டே காரணம் என்று அமெரிக்கா அறிவித்தது. அய்டீட்டைப் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் சோமாலியாவில் ஐ.நா. அமைதிப் படையின் நோக்கமே திசை திருப்பப்பட்டது.

அய்டீட்டைப் பிடிக்க பெரிய யுத்தம் ஒன்றே நடத்தப்பட்டது. தரையிலும் ஆகாயத்திலும் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களினால் அய்டீட்டையோ அல்லது அவரின் ஆதரவுப் படைகளையோ அழிக்க முடியவில்லை. ஆயிரக் கணக்கான அப்பாவி சோமாலிய மக்களையே கொல்ல முடிந்தது.

- சஞ்சாரன் -

போராளிகளையும் அப் (5 ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# இலட்சிய எழுத்தாளர் டானியல்

எழுத்தாளர் டானியல் மறைந்து 8 ஆண்டுகள் கழிந்து விட்டன.

1950களில் சிறுகதை எழுத்தாளராக இலக்கிய உலகில் பிரவேசித்த டானியல் இறக்கும்போது தலைசிறந்த நாவலாசிரியராகப் பரிணமித்தார்.

35 ஆண்டுகளுக்கு மேலான அவருடைய இலக்கிய வாழ்வில் 300க்கு அதிகமான சிறுகதைகளை எழுதியுள்ளார்.

ஈழத்துத் தினசரிகள், சஞ்சிகைகள் முதலியவற்றிலும் ''தாமரை'', ''சரஸ்வதி'' முதலிய இந்திய சஞ்சிகைகளிலும் அவருடைய சிறுகதைகள் வெளிவந்தன.

அவர் எழுதிய முதல் நாவல் ''பஞ்சமர்'' பெரும் வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்திய நாவல் ஆகும். இதைத் தொடர்ந்து பஞ்சமர் 2ஆம் பாகம் வெளிவந்தது. பின்னர் ''கோவிந்தன்'', ''அடிமைகள்'', ''கானல்'', ''பஞ்சகோணம்'' ஆகியன வெளிவந்துள்ளன.

''டானியல் சிறுகதைகள்'', ''போராளிகள் காத்திருக்கின்றனர்'', ''டானியல் குறுநாவல்கள்'' ஆகியனவும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கிய உலகில் டானியல் தனித்துவமானதோர் இடத்தைப் பெறுகின்றார்.

அவர் இலக்கியவாதி மட்டும் அல்ல. அரசியலிலும் உறுதியான ஈடுபாடு உடையவராக அவர் திகழ்ந்தார்.

அவர் தமது எழுத்தாலும் பேச்சாலும் நடவடிக்கைகளாலும் பொதுவுடமைக் கோட்பாட்டின் வெற்றிக்காக உழைத்தார்.

அவர் சிறுபான்மை இனத்தவராகிய தமிழர் மத்தியில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டார்.

காணி நிலம் இன்றி, கல்வி



டானியல்

உத்தியோக வசதி இன்றி, கூலியிற்றுக் கஞ்சிக்கும் அன்றாடப் பிழைப்பை நம்பி வாழும் தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும் பகுதியினரின் அவல வாழ்க்கையைத்தான் டானியல் தமது இலக்கியத்தின் பிரதான கருப்பொருளாகக் கொண்டார்.

கிளர்ச்சி இலக்கியம்

உழைத்துத் ... கலை இலக்கியங்களின் ... புப் பண்பான ... தன்மை டானியல் படைப்புகளிலும் அமைந்திருக்கிறது.

இலக்கிய வைத்தியரான அவர் சாதி என்ற நோயின் பல்வேறு வெளிப்பாடுகளைத் தமது சிறுகதைகள் மூலமும் நாவல்கள் மூலமும் அம்பலப்படுத்தியுள்ளார்.

அவரின் வாழ்வு சொல்லும் செயலும் இணைந்த வாழ்வு.

எந்த மக்களின் நலனுக்காகத் தமது இலக்கியங்களைப் படைத்தாரோ அந்த மக்களின் இன்ப துன்பங்களுடனும் போராட்டங்களுடனும் அவர் இரண்டறக் கலந்திருந்தார்.

இலக்கியவாதி டானியல் ஒரு போராளி; மக்களின் போராட்டத்தில் ஒரு பங்குதாரர் அவர் தமது படைப்புகளால் வழிகாட்டுவதோடு நின்று விடாமல் போராட்டத்தில் சகல உதவிகளையும் புரிந்தார். போராட்டத்தை வழிநடத்தும் திறன் படைத்தவராகவும் அவர் விளங்கினார்.

டானியல் இலக்கியத்தில் போராட்டத்தன்மை வாய்ந்த மனித நேயம் மிளிர்கிறது.

பாட்டாளி வர்க்கப் புரட்சி ஒன்றால் ஏற்படும் சமுதாய மாற்றத்தில்தான் எல்லா அடக்குமுறைகளும் சுரண்டல்களும் அழித்தொழிக்கப்படும் ...

-பாரதிநேசன்-

# சூழல் பாதுகாப்பு திட்டம் முல்லை மாவட்டத்தில்

இன்று உலக நாடுகளையே அச்சுறுத்தும் பெரும் பிரச்சினையாக சூழல் மாசடைந்து வரும் சூழ்நிலை உருவாகி உள்ளது. ஒவ்வொரு நாடும் தமது நாட்டின் சூழலை பாதுகாக்க கடும் பிரயத்தனம் செய்கின்றன.

விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தமிழீழத்தின் சூழலை பாதுகாக்கவும், விறகுக்காக மரங்கள் வெட்டப்படுவதை தடுக்கவும் பயன் தரும் மரங்களை பேணவும், மரங்களை

## அபிவிருத்தி

நடுகை செய்யவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செயற்படுத்தி வருகின்றது.

முல்லை மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் சனசமூக நிலையங்களையும், விளையாட்டுக் கழகங்களையும் மற்றும் பொது ஸ்தாபனங்களையும் ஒன்றிணைந்து மரம் நாட்டுவதற்கான ஏற்பாடுகளை செய்தது அத்துடன் முல்லை மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களையும், விவசாய ஆசிரியர்களையும் ஒன்றிணைந்து பாடசாலைகளிலேயே பயன் தரும் மரங்களை உற்பத்தி செய்தும் அவற்றைப் பெற்று மர நடுகைக்கு பயன்படுத்தப்பட்டது.

இதன் அடிப்படையில் முல்லை மாவட்டத்தில் முல்லை, ஒட்டிசுட்டான், புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி மற்றும் மணலாறு கோட்டத்திலும் 33,500 பனம் விதையும், 9,000 தேக்கும், 900 வேம்பும், 1450 பழமரமும் 800 சமண்டலையும் நடப்பட்டுள்ளது மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் 6435 பயன்தரும் மரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு பாடசாலைகளிலும் மற்றும் இடங்களிலும் நடுகைக்கு பயன்படுத்தப்பட்டமை முக்கியமாக குறிப்பிடத்தக்கது. அத்துடன் முல்லை மாவட்டத்தில் இருந்து கிடைக்கப்பட்ட தேக்கம் கிழங்குகள் த.பொ.மே. நிறுவனத்தின் (தாவடியில் உள்ள) சூழல் பாதுகாப்பு பகுதியினால் இலவசமாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது கமநல சேவை நிலையம் மற்றும் பொது ஸ்தாபனங்களுக்கு நடுகைக்கு சவுக்கு மரம், மரமுந்திரிகை என்பனவும் வழங்கப்பட்டுள்ளது.

எமது இல்லங்களில் மரம் ஒன்றை நாட்டுவதன் மூலம் நாம் பயன் பெறும் அதே வேளை எமது எழில்மிக்க அழகான தேசத்தை மாசடையாமல் பாதுகாக்கவும், உதவுகின்றோம் என்பதனை மக்கள் உணர்ந்து எமது தேசத்திலே மரங்களை நட்டுப் பராமரிப்பதில் அக்கறை செலுத்த வேண்டும் என த.பொ.மே. நிறுவனம் கேட்டுக் கொள்கின்றது.

தகவல்:
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Sony I C. F SW - 7600 (Digital) Radio. Sony I C F SW 1 (Digital) Radio, M - 3000 Camera Battery M - 7 Camera Battery எவர் விஷன் 21 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(சி-7460)

முட்டையிடும் பண்ரம், வாண் கோழிகளும்புறொயிலர் இறைச்சிக் கோழிகளும் விற்பனைக்குண்டு. S. ஆனந்தம், இல. 7, நிக்கலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, கண்டிக்குளி. (30076)

அடைவைப்பதற்கு உகந்த நல்ல இன வெள்ளைத் தாரா முட்டைகளும், வெள்ளடி, பன்ரம், பாபறிக்கல்ஸ், கோல்டின் கொமற் முட்டைகளும், வெள்ளடி, பன்ரம் குஞ்சுகளும் வெள்ளை முயல் குட்டிகளும் விற்பனைக்குண்டு தொடர்பு: கதிர் தேநீர்ச்சாலை, துறைமுகச் சந்தி, கொழும்புத்துறை.
(30092)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் சனி, ஞாயிறு, புதன் கிழமைகளில் காலை 8-00 — 11-00 வரை கத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி (30063)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு மாத Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.
(30062)

### புறொயிலர் குஞ்சு

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடர் கொடுத்தவர்கள் உடன் பெற்றுக்கொள்ளவும் தேவையானோர் உடன் தொடர்பு கொள்ளவும். 'பல்லிகாபதி', சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (30058)

### இலவச திருமண சேவை

38 வயது விசாகம், செவ்வாயற்ற, கிரசபாவம் 55, ஜேர்மன் விசாவுடன் தொழில் புரிபவருக்கு பண்பான குடும்பத்தில் மணப்பெண் தேவை பணயசன் யாழ் உள்ளார் தொடர்பு: விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி.
(30064)

### தேவை

அச்சுக்கோப்பாளர் தேவை இருபாலாரும் நேரில் வந்து சந்திக்கலாம் தானியங்கி பஷின் மைண்டரும் தேவை 37, கே. கே எஸ் வீதி, சுன்னாகம்.
(7039)

தமிழ் தட்டெழுத்தாளர் (Typist) தேவை. 30 03-94 காலை 8-00 — 1-00 மணிக்கு நேரில் வரவும், Bond யாழ்ப்பாணம்.
(30083)

### மணப்பெண்கள் தேவை

யாழ் இந்து, கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த சுவிஸ் பிரஜாஉரிமைபெற்ற 31வயது பூரட்டாதி, 29 வயது சதயம் தொழில்புரிபவர்களுக்கு நற்குணமும் அழகும் உடைய மணப்பெண்களைத் தேடுகின்றனர். சுவிஸில் வசிப்பவரும் விரும்பத்தக்கது விபரங்களுடன் தொடர்புகொள்ளவும்: மே/பா 27, உதயன் சேவை நிலையம் 82, கே. கே எஸ் வீதி, சுன்னாகம்.
(7040)

பிரான்ஸிலுள்ள கத்தோலிக்க 38 வயது மணமகனுக்கும், குற்றமற்ற 27 வயது கனடா எஞ்ஜினியருக்கும், 31 வயது உள்ளூர் டாக்டருக்கும் தேவை. மங்களா ஏஜென்சி, கொய்யாத் தோட்டம்
(30090)

### மணமகள் தேவை

வெளிநாட்டை விரும்பும் செவ்வாய்க் குற்றமற்ற 32 வயது மணப்பெண்ணுக்கும் குற்றமற்ற 36 வயது ஜேர்மன் மணமகனுக்கும் 30 வயது சுவிஸ் மணமகனுக்கும் தேவை மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம்.
(30089)

### மணமகள் தேவை

இருபத்தெட்டு வயது. செவ்வாய் தோஷமற்ற சுவாதி 2ஆம் கால், சைவ வேளாள ஆசிரியைக்கு. ஐந்து மைல் சுற்றாடலுக்குள் வசிக்கும் படித்த, அரச/தனியார் துறையில் தொழில்புரியும் மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். பெண்ணுக்கு வீடும் வழங்கப்படும். தொடர்பு: சந்திரன் பல சரக்கு கடை, மார்க்கெட் உட்புறம், சாவகச்சேரி
(30028)

### மகாதேவா ஜோதிடம்

புது வருஷப் பலன் பல புது விஷயங்களுடன் வெளிவந்துள்ளது ஜோதிடரை தினசரி இல: 140, செம்மணி வீதி, நல்லூரில் சந்திக்கலாம்.
(30091)

### தவறிவிட்டது

கைச்செயின் ஒன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். G V Kanesalinkam, இல 298, K K. S Road Jaffna (29943)

### பயிற்சி வினாத்தாள்கள்

தவணைப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்காக ஆண்டு 3 முதல் O/L வரை அனைத்து பாடங்களுக்குமான வினாத்தாள்கள் — விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond, யாழ்ப்பாணம் (30084)

### இலவச ஆலோசனை

லண்டனில், ACMA, Transport, Marketing பட்டங்கள் பெற்றவர் இலவசமாக சேவை மனப்பான்மை அடிப்படையில் தமிழ் ஈழத்தில் மேல் வகுப்புப் படிக்கும் பிள்ளைகளுக்கு ஆலோசனை கூற விரும்புகிறார். சதிர மலைப்பிள்ளை, 15/3 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(30087)

---

யாழ் பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான 3 ஆம் தவணை பணம் 28-03-94 முதல் யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன, இதற்கான நேர அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் இடப்பட்டுள்ளது.

பதிவாளர்
(சி 7613)

---

## திருநெல்வேலி சிவன் கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக கால
# தொடர் விரிவுரைகள்

**27-03-94** இல் சிறப்பு சொற்பொழிவு:- சம்பவாரிதி இ. ஜெயராஜ் (அ. இ. க. க.)

**27-03-94** முதல் **10-4 94** வரை [ 15 தினங்கள் ]
தினசரி இரவு 7 மணி முதல் 8 மணிவரை
கந்தபுராணம்
நிகழ்த்துபவர்:- 'கந்த நிதி' த. சிவகுமாரன் [ அமைப்பாளர் காரை கம்பன் கழகம் ]

**11-4-94** முதல் **25 4-94** வரை [ 15 தினங்கள் ]
தினசரி இரவு 7 மணிமுதல் 8 மணி வரை
திருவிளையாடல் புராணம்
நிகழ்த்துபவர்:- 'சிவனருட் செல்வன் ஆறு. திருமுருகன் B.A [ ஆசிரியர் ஸ்கந்தவரோதயா கல்லூரி ]

**26-4-94** முதல் **11 5 94** வரை [ 16 தினங்கள் ]
தினசரி இரவு 7 மணி முதல் 8 மணிவரை
மகாபாரதம்
நிகழ்த்துபவர்:- கம்பவாரிதி இ ஜெயராஜ் [ அமைப்பாளர் அ. இ. கம்பன் கழகம் ]

சிவனடியார்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தேவஸ்தானம்
திருநெல்வேலி சிவன் கோவில்
திருநெல்வேலி

விளம்பர அன்பளிப்பு:-
**ஆறுமுகம் சிற்பாலயம்**
திருநெல்வேலி
(சி-7611)

---

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**ஆசிரியர் ஏ சி. கனகரத்தினம்**
திதி: 27 — 03 — 1994

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

13/3, நாயன்மார் வீதி, நல்லூர் (30059)

---

உ
யாழ். கைதடி வடக்கு
## அருள்மிகு ஸ்ரீவாலாம்பிகை அம்பாள் ஆலய சம்புரோக்ஷண
# மஹா கும்பாபிஷேகம்

ஸ்ரீமுக வருடம் பங்குனித் திங்கள் 13ஆம் நாள் 27 — 03 1994 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் மணி 9-50 முதல் 11-02 வரை

சர்வபோதகம்: சிவஸ்ரீ நா. மகாதேவக் குருக்கள் (தர்மசாஸ்தாகுருகுலம், இணுவில்)

பிரதிஷ்டா குரு: சிவாச்சாரியமணி சிவஸ்ரீ மு. கணேசக்குருக்கள் (ஆலய பிரதமகுரு, கைதடி)

சர்வசாதகம்: பிரம்ஸ்ரீ சே. நிர்மலேஸ்வர சர்மா (நவாலி)

அருள் ஆசி வழங்குபவர்: நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்

சிறப்புச் சொற்பொழிவு: டாக்டர் K T. சபாநாதன் அவர்கள்

ஆலய பரிபாலன சபை:
சி. பூபாலசிங்கம், செயலாளர். சு. சிவம் பொருளாளர். மு. கதிரவேலு, தலைவர்
[30067]

---

## தென் இந்திய திருச்சபை யாழ். ஆதீனம்
# அச்சக ஊழியர் தேவை

சகல அச்சக வேலையும் தெரிந்த பெண் ஆங்கில அச்சுக்கோர்ப்பாளர் உடன் தேவை நேரில் வரவும். சம்பளம் திறமைக்கு ஏற்ப கொடுக்கப்படும் தேவை ஏற்படின் இருப்பிட வசதி செய்து கொடுக்கப்படும்.

— முகாமையாளர்.

ஆதீன காரியாலயம்
வட்டுக்கோட்டை, [சி-7463]

---

# ENGLISH SHORT HAND AND TYPEWRITING CLASSES

The Methodist Church Jaffna Circuit will Conduct a five Months Course Free of Charge.

Females below 25yrs of age may send in their Applications in English in their own handwriting to reach C L S Book Shop 570, Hospital Road, Jaffna on or before 10-04-1994

METHODIST CHURCH
JAFFNA CIRCUIT.

[C-7466]

---

# வாழ்த்துகின்றோம்

இன்று ஞாயிற்றுக்கிழமை இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறும்.
செல்வி
## ஜனித்திரா சோமசூரியசிங்கம்
(நாட்டிய கலாகேந்திர மாணவி)
அவர்களின்

பரதநாட்டிய அரங்கேற்றம் சிறப்புற கோண்டாவில் மேற்கு தமிழ் வேதபாராயண சனசமூக நிலையம் பாராட்டை தெரிவித்துக்கொள்வதுடன் அவரை சிறந்த நாட்டிய மேதையாக உருவாக்கிய ஆசிரியை திருமதி கிருஷ்சாந்தி இரவீந்திரா (விரிவுரையாளர், இராமநாதன் நுண்கலைக் கழகம்) அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து கொள்கிறது

தமிழ் வேதபாராயண சனசமூக நிலையம்,
கோண்டாவில், மேற்கு. (சி 30094)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 01 — 1915



மறைவு: 27 — 03 — 1992

**திருமதி பகவதி ஐயாத்துரை**
திதி: 3 4 1994

ஆண்டு இரண்டு ஓடின லும் ஆறாது எங்கள் துயரம். உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

"கணேசபதி"
சாவகச்சேரி. (30010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## முயற்சியை முடுக்கி விடுவோம்!

மலேரியா, நெருப்புக் காய்ச்சல், மூளைக்காய்ச்சல், செட்ரிசீமியா — இவை குடாநாட்டை இன்று கலங்கடித்துக் கொண்டிருக்கும் நோய்களின் பெயர்கள்.

முன்னெப்போதும் இல்லாதவாறு இந்த நோய் அரக்கன் குடாநாட்டு மக்களின் குரல்வளையைப்பிடிக்கத் தொடங்கியிருக்கிறான்.

இந்நோய்களினால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் ஆஸ்பத்திரியில் வந்து குவிவோரின் தொகை மற்றும் இவற்றினால் உயிரிழப் போரின் கணக்கு ஆகியவை குறித்த பத்திரிகைகளில் வரும் செய்திகள் பீதியைக் கிளப்புகின்றன.

வெளிநாடுகளில் நோய் காரணமாக பத்துப் பேர் மரணமானால் அதனைப் பெரிய பாதிப்பாகக் கருதி பாதுகாப்பு, தடுப்பு நடவடிக்கைகளில் சுகாதார மற்றும் வைத்தியவட்டாரங்கள் மிகத் தீவிரமாக ஈடுபடுகின்றன. ஆனால் இங்கோ நோய் வருகிறது, மக்கள் சாகிறார்கள் என்ற துரதிர்ஷ்டமான நிலை நிலவுகிறது. மக்கள் வீணாக இறக்கிறார்களே என்று கவலைப் படுவதோடு எல்லோரும் தமது கடமையை முடித்துக்கொள்கிறார்கள். அதற்கு மேல் கொண்டு செயற்படுவோர் மிகக் குறைவு

ஸ்ரீலங்கா அரச குடாநாட்டின் மீது பொருளாதாரத் தடை என்ற பெயரில் விதித்திருக்கும் கெடுபிடியினால் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் எடுத்து வருவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டு விட்டது. இதனால் —

★ மருத்துவ ஆய்வு கூட நடவடிக்கைகள் செயலிழந்து விட்டன. இது நோயாளரைப் பீடித்திருக்கும் நோய்களை அடையாளம் காண முடியாத மோசமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

★ நோய்களிலிருந்தும் மக்களைக் காப்பாற்றுவதற்கான தடுப்பு மருந்துகள், நோயால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கத் தேவையான மருந்துகள், நோய் பரவாமல் தடுப்பதற்கு வேண்டிய கிருமி நாசினிகள், தொற்று நோய் நீக்கிகள் போன்றவை இல்லாததால் நோய் அரக்கன் தன் பிடியை நெருக்க பெரிதும் அது வாய்ப்பாகி விட்டது.

★ இது தவிர, ஸ்ரீலங்கா அரசின் பல்வேறு தடைகளினால் உணவு, போசாக்கு, சுகாதார வசதியின்றி நலிந்து போயிருக்கும் குடாநாட்டு மக்கள் நோய்க் கிருமிகளுக்கு எதிராக முகம் கொடுக்க முடியாத — வலுவற்ற — நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையை குடாநாட்டு மக்களுக்கு நன்கு புரிய வைக்கவும், இத்தகைய நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளச் செய்விக்கவும், நோய் தொற்றினால் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அதனை முகம் கொண்டு வெல்லுவதற்கு வழிகளைக் காட்டவும்—

முதலில் மக்கள் மத்தியில் இந்த நோய்கள் மற்றும் நிலைமைகள் குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இதற்காக —

'மலேரியா வாரம்' போன்ற சுகாதார விழிப்புணர்வு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன; பொது அமைப்புக்கள் கிராமம் கிராமமாக, பாடசாலை பாடசாலையாக கூட்டங்கள், கருத்தரங்குகளை நடத்துகின்றன! அறிவுரை கூறும் பிரசுரங்களை வெளியிடுகின்றன.

ஆனால் அவர்களின் செய்தி சமூகத்தை எட்டியதாகத் தெரியவில்லை; இந்த நோய் அரக்கனினால் சமூகத்துக்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்துக் குறித்தோ, அதற்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகளின் அவசரம் குறித்தோ சமூகம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

எனவே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சிகளை இன்னும் முடுக்கிவிட வேண்டும். அது அவசியமானது.

# சிங்கள மக்களிடம் உதித்த மனமாற்றத்தை பிரதிபலிக்கும் தெற்குத் தேர்தல் முடிவுகள்

பேராசை பெரும் தரித்திரம் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆயினும் அதன் உண்மை புரியாதவர்கள் அதனைப் பரீட்சித்துப் பார்க்க நினைப்பதுண்டு. அவ்வாறு பரீட்சிக்கப் போய் இருப்பதையும் இழந்து பரிதவிப்பதும் உண்டு.

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும் அந்த வகையினரில் ஒருவராக மாறி, இப்போது ஆப்பிழுத்த குரங்காக நின்று அவதிப்படுகிறார். முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு மனம் புலம்புகிறார்!

1993 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் தெற்கில், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் சேர்ந்து ஆட்சியை அமைக்க

**அரசியல்**

ஜனநாயக உரித்துடையனவாக இருந்தன. ஆனால் அதனை ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் விரும்பவில்லை. கொழும்பில் அதிகாரக் கயிற்றைப் பிடித்திருக்கும் தமது கட்சியே மாகாண சபைகளையும் ஆள வேண்டும் என்ற பேராசை அவர்களுக்கு புத்தி பேதலிக்க வைத்தது.

அதிகாரம் தங்கள் கையில் தானே இருக்கிறது என்ற இறுமாப்பு அதிகரித்தது. அதனால் தென் மாகாண சபை, மற்றும் வடமேல் மாகாண சபைகளில் தமது கட்சியையே அதிகாரக் கதிரையில் பிடித்துக் கொண்டு போய் இருத்தினர்.

நீதிமன்றம் இந்த எதேச்சாதிகாரப்போக்கு குற்றம் எனத் தீர்ப்பளித்தது. ஆனால் அதனை உள்வாங்குவதற்கு விஜேதுங்காவின் மனம் மறுத்தது. சந்தர்ப்பம் பார்த்து, வேண்டிய தில்லுமுல்லுச் செய்து, தமது கட்சிக்காரரையே முதலமைச்சர் பதவியில் அமர்த்துவதற்கு அவர் திட்டம் தீட்டினார்.

ஜனநாயக நடைமுறைக்கு ஒவ்வாத முறையிலும், சட்டத்தையும் அதிகாரங்களையும் தமது தேவைக்கேற்ப வளைத்தெடுத்தும், தெற்கில் பிரான்சிஸ்கூ நாடகத்தை அரங்கேற்ற முனைந்தார். அதுவும் கைகூடாமற்போக தென் மாகாண சபையைக் கலைத்து தேர்தலுக்கு ஒழுங்கு செய்தார் ஜனாதிபதி.

மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அதில் வெற்றியீட்டுவதற்கு "ஏற்பாடுகளைச்" செய்தால் நாடாளுமன்றத் தேர்தலை வைத்து அதில் ஐ. தே. கட்சியை வெற்றிபெறச் செய்யலாம். அதை நடத்திவிட்டால் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமலே, அரசமைப்புச்சட்டத்தை மாற்றி, நாடாளுமன்றம் மூலம் வெகு இலகுவில் தாம் மீண்டும் ஜனாதிபதியாகலாம். தமிழர், முஸ்லிம்களின் தயவில்லாமலே, வாக்குகளைக் கேட்காமலே, ஜனாதிபதியாகலாம் என்பது அவரது திட்டமாக இருந்தது

இத்தகைய பேராசையுடன் அவர் கட்டிய மனக்கோட்டைகளைத் தென் மாகாண மக்கள் இடித்து நொறுக்கி விட்டார்கள்.

### முன்னோடிப் பரீட்சை

தென் மாகாண சபைத் தேர்தல், நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களுக்கான முன்னோடிப் பரீட்சை, பரீட்சார்த்தம் என்று கூறியே ஆளுங்கட்சியும், எதிரணிகளும் தேர்தல் பிரசாரத்தைத் தீவிரமாக நடத்தின.

ஆகையால் —

தெற்குத் தேர்தலில் தோற்றாலும் பரவாயில்லை, அது ஒரு மாகாணம்தானே;

## தந்தையால் செய்ய முடியாததை சந்திரிகா சாதிக்க வாய்ப்பு வரும்

ஏனைய ஏழு மாகாணங்களிலும் எமக்குத்தான் ஆதரவுண்டு: அதனால் முக்கிய தேர்தல்கள் இரண்டிலும் நாமே வெல்வோம்; என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுமாயின் அது தனக்குத்தானே ஆறுதல் சொல்வதாகவே முடியும். தன்னைத்தானே ஏமாற்றுவதாகவும் அமையும்.

1977 இல் தென் மாகாணத்தில் உள்ள முல்கிரிகல தொகுதியில் நாடாளுமன்ற இடைத் தேர்தல் நடைபெற்றது. அதுவும் பொதுத் தேர்தலுக்கு முந்திய முன்னோடிப் பரீட்சை என்றே கருதப்பட்டது. அந்த இடைத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே வென்றது. ஆனால் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மைபலத்துடன் அமோக வெற்றியீட்டியது. சுதந்திரக்கட்சி மண் கவ்வியது.

விஜேதுங்காவும் ஏனைய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களும் முல்கிரிகலவை ஓர் உதாரணமாகக் கூறுவதற்கு நினைக்கலாம் ஆனால் அன்றைய பின்னணியும் இன்றைய பின்னணியும் வெவ்வேறு.

1977 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஏழு வருடத் தொடர் ஆட்சியில் மக்கள் பல துன்பங்களை அனுபவித்து சலிப்படைந்திருந்தார்கள். அதனால் பொதுத் தேர்தலில் மாற்றுக் கட்சியான ஐ. தே. கட்சிக்குச் சந்தர்ப்பம் அளிக்க விரும்பி அதனை ஆட்சியில் அமர்த்தினார்கள்.

### சிங்கள மக்கள் சலிப்பு

ஆனால் இப்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருடத் 'தொடர் ஆட்சியில் தென்னிலங்கை மக்கள் சலிப்படைந்துவிட்டார்கள் ஆகையால் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலில் எது நடைபெற்றாலும் தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளே அங்கும் மீண்டும் விளையும்.

### மூன்று கட்டங்கள்

ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட ஆட்சியின் முற்பகுதியில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தமக்கேற்ற அரசமைப்புச் சட்டம் ஒன்றை உருவாக்கி, ஒரு சர்வாதிகாரியாகவே நடந்துகொண்டார். முதலாளித்துவ வலது சாரிக் கொள்கைகளைக் கைக்கொண்டும், அரசியல் எதிரிகள் மீது வஞ்சம் தீர்த்தும், அனேகமாக ஒருவித சர்வாதிகார ஆட்சியையே நடத்தினார். அவை எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ் மக்களை அடக்கி ஆள வேண்டும் என்ற உள்ளார்ந்த இலக்குடன் அவர் செயற்பட்டார். தமிழர்களுக்கு எதிராக இராணுவ அடக்குமுறையைத் தீவிரப்படுத்தினார். தமிழர்களின் விடுதலை வேட்கையைத் தணிக்க முடியாது என்பதனைக் கண்டு இந்தியப் படைகளை உதவிக்கு அழைத்தார்.

இதனை அடித்தளமாக வைத்து தெற்கில் வன்செயல்கள் வெடித்தன. அரசாங்கம் இயங்க முடியாத அளவுக்கு ஜே வி. பி. தீவிரவாதம் ஆட்சியை ஆட்டம் காணவைத்தது. ஆபத்தை உணர்ந்த ஜே. ஆர். மெதுவாக அரசகத்திலிருந்து ஒதுங்கிக் கொண்டு பிரேமதாசாவுக்கு வழிவிட்டார். அரசியலில் இருந்து ஒய்வுபெறுவதாகக் கூறிச் சென்றார்!

பிரேமதாசா ஜே. ஆரை விட மிகவும் வித்தியாசமானவராக இருந்தார். சில விவகாரங்கள், நடத்தைகளில் அவரைவிட நல்வராக நடந்து கொண்டார். அதேவேளை, சில விவகாரங்களிலும், நடத்தைகளிலும் ஜே ஆரை விட மிக மிக மோசமானவராக இருந்தார். இறுதிக் காலத்தில் அவர் முற்று முழுதான சர்வாதிகாரியாக மட்டுமன்றி தனிநபர் ஆட்சி நடத்தும் பாசிசப் போக்கையும் கைக்கொள்ள முயன்றார்.

தமது பதவியையும், தன்னையும் காப்பாற்றவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தவர் மே முதலாம் திகதியன்று தன்னைக் காப்பாற்ற முடியாதவரானார். தனது அரசியல் எதிரிகளை மேலோங்க விடாமல் பார்த்துக்கொண்ட அவராலும் தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வுக்கான முடியாமற் போயிற்று இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் காலம் கடத்தும், காலம் வாங்கும் உத்தியை கையாண்ட அவரே காலஞ் சென்றார்!

கடந்த பத்து மாத கால விஜேதுங்கா ஆட்சியில் அரசாங்கம், நிலை தடுமாறிய நிலையில், தக்க தலைவன் இல்லாத, வல்லமையுள்ள, திறமையுள்ள மாலுமி இல்லாத அலை கடல் மேல் படகு போல விழுந்தெழுந்து கொண்டிருக்கிறது.

### எதையும் செய்யும் பக்குவ நிலை

ஜனாதிபதி பதவியில் விபத்தாக வந்து விழுந்த விஜேதுங்கா, அதில் நெடுங்காலம் ஒட்டிக்கொண்டிருக்க ஆசைப்படுகிறார். பதவி ஆசை இந்த வயதாகியும் அவரை விட்டு வைக்கவில்லை. தான் அந்தக் கதிரையில் தொடர்ந்து இருப்பதற்காக எந்தப் பாவத்தைச் செய்யவும் தயார் என்ற "பக்குவ" நிலைக்கு ஆளானார்.

ஜனநாயக விரோத எதேச்சாதிகார நடவடிக்கை எதனைச் செய்வதற்கும் தயங்காதவரானார். நீதிமன்றம் குற்றவாளியாகக் கண்ட மூன்று குற்றவாளிகளுக்கு மன்னிப்புவழங்கும் அளவுக்கு அவரது ஆட்சி நீதி அமைந்திருக்கிறது.

அதிகார துஷ்பிரயோகம், மோசடி, தில்லுமுல்லு, ஊழல் என்று எல்லாவகை ஜனநாயக விரோத நடவடிக்கைகளும் மலிந்துவிட்டன. பிரேமதாசாவை விட இவர் தூய்மையாளராகவும், துட்டத்தனம் இல்லாதவராகவும் இருப்பார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு விஜேதுங்கா பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளார்.

ஜே ஆர்., பிரேமதாசா, விஜேதுங்கா என்று மூன்று பேரும் மூன்று கட்டங்களாகச் செய்த சர்வாதிகார, பாசிச, எதேச்சாதிகார ஆட்சிவினைகளின் கூட்டுமொத்த விளைவே தென் மாகாண சபைத் தேர்தல் முடிவு. அதிலும் மிகக் குறிப்பாக விஜேதுங்காவின் பத்துமாத ஆட்சியில் மக்கள் வெறுப்புற்றுள்ளார்கள் என்பதனைத் தேர்தல் துல்லியமாகக் காட்டுகிறது.

ஆகையால், பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தம்மைத் திருத்திக் கொண்டு மக்கள் ஆதரவைப் பெறமுடியும் என்று ஐக்கியதேசியக் கட்சியினர் நினைத்தால் அது ஈடேறுமா என்பது சந்தேகம்.

ஜனாதிபதி விஜேதுங்காவின் தமிழர்களுக்கு எதிரான பேரினவாதப் போக்கை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனை தென் மாகாண சபைத் தேர்தல் மிகத் தெளிவாகக் காட்டியிருக்கிறது. இனத்துவேசம் அனல்கக்க அவர் ஆற்றிய தேர்தல் பிரசார உரைகள் சிங்கள வாக்காளப் பெருமக்களை கவரவில்லை.

இனப் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு — யுத்தம் — மூலமன்றி சமாதான வழியில் முடிவுகாண வேண்டும் என்ற விருப்பம் சிங்கள மக்கள் மத்தியில் மெதுவாக அரும்பத் தொடங்கியது குறித்து இப்பத்தியில் அவ்வப்போது குறிப்பிட்டிருந்தோம்.

### மலர் கனியாவதற்கு

அந்த அரும்பு நிலை இப்போது மலர்ச்சி கண்டுள்ளது என்பதனை தென் மாகாணத் தேர்தல் கணிசமான அளவுக்கு எடுத்துக் காட்டியுள்ளது. மலர் காயாகி, கனிந்து கைக்குக் கிடைப்பது சிங்கள மக்களைப் பொறுத்ததே. அவர்கள் இந்த நிலைப்பாட்டில் நிரந்தரமாக நின்றால் எல்லாம் நன்றே முடியும். யுத்தத்தின், இராணுவத் தீர்வின், அடக்கு முறையின் பயங்கரத்தை அவர்களுக்கு உணர்த்திவிட்டால் கனியைப் பெறுவது இலகுவாகும்.

அதற்குச் சாதகமான ஒரு பருவகாலம் இப்போது தோன்றியுள்ளது எனலாம். தென் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் திருப்பம், ஒருவகை புதிய விழிப்புணர்வு என்பன மலர் கனியாவதற்கான சக்தி மிக்க பசளைகளாக அமையக் கூடும்.

### சிங்களவரின் நம்பிக்கை நட்சத்திரம்

தென் மாகாணத் தேர்தலில் எதிரணி வெற்றி பெறுவதற்கு உந்து சக்தியாக விளங்கிய சந்திரிகா குமாரணதுங்கா ஸ்ரீலங்கா அரசியல் வானில் சிங்கள மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக மாறிவருவதையும் தெற்குத் தேர்தல் புலப்படுத்தியுள்ளது.

முதிய அரசியல் தலைவர்கள் காவோலைகளாக கழன்று விழவேண்டியவர்களாகி வருகிறார்கள் அந்த வகையில் இளம் தலைமுறையின் தலைமைத்துவம் தெற்கு மக்களுக்குக் கிடைக்க இருக்கிறது. சந்திரிகா குமாரணதுங்கா, ரணில் விக்கிரமசிங்கா காமினி திசநாயக்கா, தினேஷ் குணவர்த்தனா ஆகியோர் இன்றைய இளம் தலைமுறைத் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு எதிரணியில் சந்திரிகாவே தலைமைத்துவத்துக்கு உயர்வார். அங்கு போட்டிக்குப் போக எவருமில்லை கட்சி வளர்ச்சிக்கும், ஒற்றுமைக்கும் உபத்திரவமாக இருந்த அனுராவை விஜேதுங்கா ஆசையோடு அரவணைத்துக் கொண்டதால் தென்மாகாண வெற்றியோடு எதிரணியின் வளர்ச்சி துரிதமடையும்

தென்மாகாண சபைத் தேர்தல் முடிவுகளோடு விஜேதுங்கா வீட்டுக்குப் போய் ஓய்வெடுத்தால் தான் ஐ. தே. கட்சிக்கு மீட்சியுண்டு அவர் பேசிய பிரசாரக்கூட்டங்களில் மக்கள் கூட்டம் குறைந்திருந்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மக்களோடு மக்களாகச் சென்று தேனீர் குடித்து, குளத்தில் குளித்து வாக்குத் தேடும் அவலநிலை ஏற்பட்டது!

விஜேதுங்கா மனம்விரும்பி இளைப்பாறுவாரா என்பது கேள்விக்குரியது. அவர் அவ்வாறு வீடு போனாலும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைத்துவத்துக்கு ரணிலுடன் காமினி மோதும் ஒரு கட்டத்தை உருவாக்கிவிட்டே செல்வார்.

### புதிய அரசியல் அரங்கம்

காமினியைக் கழித்தால் இந்தப் பக்கத்தில் ரணிலும், அந்தப் பக்கத்தில் சந்திரிகாவும் தலைமைத்துவத்தில் இருப்பார்கள் எனக் கொள்ள இடமுண்டு அத்தகைய ஓர் அரசியல் அரங்கம் உருவாகினும் உயர் குழாம் தலைமைத்துவமே மீண்டும் சிங்கள மக்களுக்குக் கிடைக்கப் போகின்றது. ஆம் சந்திரிகா, பண்டாரநாயக்கா குடும்பத்தவர் ரணிலும், ஜே. ஆர். மற்றும் டட்லி போன்ற பிரபுத்துவ குடும்பப் பின்னணியில் வந்தவர். சிங்களவர்களின் தலைவிதி அதுவென்றால் யார் என்ன செய்வது?

மேலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்தாலும் அதன் பொருளாதாரக் கொள்கைகளில் பெரும் மாற்றம் இருக்கப் போவதில்லை. தமது பொருளாதாரக் கொள்கையும் திறந்த சந்தைப் பொருளாதாரமாகவே இருக்கும் என்று சந்திரிகா கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு அளித்த செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

அதேபோல இனப்பிரச்சினை விவகாரத்திலும் சந்திரிகா சற்று வேறுபட்ட நிலைப்பாட்டுடன் காணப்படுகிறார். "தமிழ் மக்கள் மத்தியில் நம்பகத் தன்மையைக் கட்டி எழும்புவதற்கு அவர்களுக்கு என்று ஒருவகை அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்கு நியாயமான அளவு அதிகாரப் பரவலாக்கல் தேவை. அதற்கான அமைப்பு மாகாண சபையாக இருக்க வேண்டியதில்லை" என்ற தமது நிலைப்பாட்டை தாம் தலைமைத்துவம் ஏற்றதும், ஆட்சிக்கு வந்ததும் செய்வாரா என்பதற்குக் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

தெற்கில் சிங்கள மக்கள் மனதில் தோன்றியுள்ள மாற்றம் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு ஓரளவேனும் உதவும் என்று நம்பிக்கை கொள்ளலாம்.

தமிழருக்குரிய உரிமைகளை வழங்குவதற்கு விருப்பம் கொண்டுள்ள சந்திரிகா பதவிக்கு வந்ததும், அவரது தந்தையாருக்கு தடைபோட்டது போல இவருக்கும் முட்டுக்கட்டை போடுவதற்கு பேரினவாதிகள் செயற்படுவார்கள். ஆனால் சிங்கள மக்கள் தமது இப்போதைய நிலையில் உறுதியாக நின்றால், தந்தை செய்ய முடியாததை மகள் சாதிக்க வாய்ப்புண்டு.

அந்தக் காலம், ஸ்ரீலங்காவில் ஆட்சி மாறினால் மட்டுமே வரும். அதற்கு முதல் தெற்குத் தேர்தலைத் தொடர்ந்து விஜேதுங்கா அரசாங்கம் என்ன செய்யப் போகிறது? இனப்பிரச்சினை யுத்தம் தொடர்பாகத் தனது தவறான அணுகுமுறையை மாற்றிக் கொள்ளுமா? அல்லது இப்போதைய நிலைப்பாட்டிலேயே நின்று கிஷப் பரீட்சை நடத்தப் போகிறதா?

### தட்டிக்கேட்பாரா

சிறுபான்மையினரின் தயவின்றி, அவர்களின் பங்களிப்பின்றி, அவர்களை ஓரங்கட்டி விட்டு ஆட்சி நடத்த வேண்டும், அடக்குமுறை செய்ய வேண்டும் என்ற விஜேதுங்காவின் கொள்கை கட்சி நலன் கருதித் தூக்கிவீசப்படுமா? அல்லது டி. பியாவே மேலோங்கி நின்று தமது வழியில் நடப்பாரா? அவரைத் தட்டிக் கேட்கவும், குட்டி வைக்கவும் ரணிலும் மற்றவர்களும் தயங்குவார்களா?

பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் வடக்கில் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி

**உதயகாந்தன்**

விட்டதாகக் காட்டி சிங்கள மக்களின் வாக்குகளை வாரி அள்ளலாம் என்ற நம்பிக்கை டி பி அரசுக்கு இனியும் தொடருமா?

அரசியல் தந்திரமும் ஞானமும் இருந்தால் அவ்வாறு செய்ய மாட்டார்கள், பங்குனி மாதம் தமிழருக்கு நல்லது செய்யும் என்ற பொதுவான சோதிடக்கணிப்பு என்னாகும் என்பது இன்னும் பதினாறு நாள்களில் தெரியவரும்!

இங்கே இன்னொரு முக்கிய விடயம் கவனிக்கப்பட வேண்டும் இராணுவ தீர்வை வாபஸ் பெறுவது அல்லது யுத்தத்தை நிறுத்துவது என்பதும் இலகுவானது அல்ல

சிங்கள மக்கள் அதனை நிராகரிக்கிறார்கள் ஆதரிக்கவில்லை என்பதற்காக யுத்தத்தை விஜேதுங்காவால் நிறுத்த முடியாது. இராணுவ உயர் அதிகாரிகள் அதனை இலகுவில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் இப்போது யுத்தத்தை நிறுத்துவதனால் இதுவரை ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் மடிந்தது வீண்தானா என்று கேட்பார்கள்.

மேலும் யுத்தத்தினால் பணம் சம்பாதிக்கும் குழுக்கள் (இராணுவத்திலும் அரசியல்வாதிகளிலும் இக் குழுக்கள் உள்ளன) அதனை நிறுத்தினால் தமது உழைப்பு பறிபோய்விடும் என்று அஞ்சி யுத்தத்தை தொடரவே அரசைத் தூண்டும்

★

**சூரியகாந்தி**
**உதயன் ஞாயிறு சிறப்பகம்**

## அய்டீட் - அலிமஹ்டீ ஒப்பந்தம் மூலம்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாவி குடி மக்களையும் இனம் கண்டு கொல்வதில் அமெரிக்கப் படைகள் தவறி இருந்தன. இதனால் முழுச் சோமாலிய மக்களின் எதிர்ப்பையும் அவை சம்பாதித்துக் கொண்டன.

இந்த மோதல்களின் போது மூன்று அமெரிக்க ஹெலிக்கொப்டர்களை அய்டீட் ஆதரவுப் படைகள் சுட்டு வீழ்த்தி இருந்தன மோதல்களில் கொல்லப்பட்ட அமெரிக்கப் படையினரின் சடலங்கள் தலைநகர் மொகடிஸு வீதிகளில் சோமாலியர்களினால் இழுத்துச் செல்லப்பட்டன.

அமெரிக்கர்களைக் கேவலப் படுத்திய இச்சம்பவங்கள் உலக தொலைக் காட்சிச் சேவைகளில் முக்கிய இடத்தைப்பெற ஆரம்பித்த போது கிளின்ரன் நிர்வாகம் எதிர்ப்புகளை எதிர்நோக்க வேண்டியதாயிற்று

வியட்நாமில் அமெரிக்கா கற்றபாடம் போதும், சோமாலியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேற வேண்டும் என்ற கோஷம் அமெரிக்காவில் வலுத்தது.

தென் வியட்நாமில் அமெரிக்க கைப் பொம்மையான நுயென் வான் தியூ அரசைப் பாதுகாப்பதற்காக அனுப்பப் பட்ட அமெரிக்கப் படைகள் வட வியட்நாம் ஆதரவு வியட்கொங் படைகளின் தாக்குதல்களை சமாளிக்க முடியாத நிலையில் பெரும் உயிர் இழப்புகளுடன் 1975 ஆம் ஆண்டு வெளியேறி இருந்தன.

இதே நிலை சோமாலியாவிலும் ஏற்படக்கூடாது என்று கிளின்ரன் நிர்வாகம் கருதுகிறது.

சோமாலியாவில் இருந்து அமெரிக்கா தனது படைகளை 1994 மார்ச் 31க்கு முன் வாபஸ் பெறப்போவதாக கிளின்ரன் நிர்வாகம் சில மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. தற்போது அது நிறைவேற்றப்பட்டு விட்டது.

சோமாலியாவுக்கு நிவாரணப் பொருள்களை அனுப்பிவிட்டு அமெரிக்கா சும்மா இருந்திருக்கலாம். இராணுவத் தலையீடு அவசியமாக இருந்ததா? என்று உலக நாடுகளில் தற்போது கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது சர்ச்சையாகவும் இது உருவெடுத்து வருகிறது.

சோமாலியா பயன் எதுவும் இல்லாத ஒரு வரண்ட பிரதேசமாக இருப்பதே இதற்குக் காரணம்.

ஆனால் அமெரிக்கப்படைகளின் தலையீட்டுக்கு பிராந்திய அரசியல் நோக்கங்கள் காரணமாக இருந்திருக்கலாம் என்று தற்போது நம்பப்படுகிறது.

★ சூயஸ்கால்வாய்க்குச் செல்லும் வழியில் சோமாலியா அமைந்துள்ளது.

★ சோமாலியாவில் இருந்து கொண்டு ஏடன் குடாவிலும், அராபியன் [illegible] இந்து சமுத்திர[illegible] யிலும் ஆதிக்கம் செலுத்த முடியும்.

★ அரபு - இஸ்லாமிய நாடுகளின் அமெரிக்க நலன்களுக்கு பாதகமாக இருந்துவரும் இஸ்லாமிய தீவிரவாதிகளின் எழுச்சியை அடக்க சோமாலியாவை ஒரு தளமாகப் பயன்படுத்த முடியும்.

இந்த வாரம் கைச்சாத்திடப்பட்ட நைரோபி ஒப்பந்தம் சோமாலிப் பிரச்சினையில் பெரிய திருப்பம் என்றே கூறலாம்.

ஆப்கானிஸ்தானிலும்போட்டிக் குழுக்களிடையே சண்டை நடைபெற்று வருகிறது இனரீதியாகவே அங்கு ஆதிக்கப் போர் நடக்கிறது.

ஆனால் சோமாலியாவில் நிலைமை வேறு. அய்டீட்டும், அலிமஹ்டீயும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ஆகவே பிரச்சினையைத் தீர்ப்பது பெரிய கஷ்டமான காரியம் அல்ல.

அமெரிக்கா சோமாலிய விவகாரத்தில் விட்ட பெரிய தவறு ஐ. நாவின் நோக்கங்களுக்கு முரணாக "கவ்போய்" தந்திரத்தை (Cow boy Tactics) கையாண்டது தான்.


அய்டீட்டைப் பிடிக்கும் முயற்சியில் அது இறங்கியிராவிட்டால் சோமாலியாவில் இருந்து [illegible]

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரத்தை பிடடியம்பதி
வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள்

# இரதோற்சவம்



இன்று 27-03-94 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அபிஷேகம் ஆரம்பமாகி 1 மணியளவில் வசந்த மண்டப பூசை நடைபெற்று அம்பாள் எழுந்தருளி 2 மணியளவில் தேரில் காட்சி கொடுத்து அருளுவார். அடியவர்கள் அனைவரும் அம்பாளை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யுமாறு வேண்டுகின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
கணேசன் பிடவை
201, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-7461)

## கண்ணீர் அஞ்சலி



நயினாதீவில் உதயம்:
14-03-1939

வறக்காப்பொலையில் அஸ்தமனம்:
24-03-1994

### இராமசாமிப்பிள்ளை செல்வராஜா

(மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா)

எமக்கெல்லாம் "செல்வா" என இருந்து யாழ். வீடமைப்பு அலுவலகத்தை அன்று அலங்கரித்த ராசாவே!
வறக்காப்பொலையில் நீங்கள் நீள் உறக்கத்தைத் தழுவிக் கொண்ட செதிகேட்டு எம்முள்ளம் கருந்து, நா நிறுத்தி நிற்கின்றோம்
அல்லற்படும் அன்னாரின் குடும்பத்தினரோடு நாமும் கண்ணீர் அஞ்சலி செய்கின்றோம்.

ஊழியர்,
யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை.

[80098]

## மரண அறிவித்தல்

### நாகமணி இரத்தினம்
(இளைப்பாறிய ஆசிரியர் - ஏழாலை தெற்கு)

ஏழாலை தெற்கு விழுசிட்டியைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் நாகமணி இரத்தினம் 26-03-94 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவஞானம், காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் அன்பு சகோதரனும், தனபாலரத்தினம், இரஞ்சிதமலர், இராசரத்தினம் (C D E கொழும்பு), நல்லரத்தினம் (பொறியியலாளர் - கனடா), தருமரத்தினம், (கணக்காளர் - கனடா), தவரத்தினம் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தம் முன்னாள் A G A மடு - ஓய்வு பெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் - மன்னார்), கலைவாணி (கொழும்பு), சுகந்தினி (கனடா) சுஜந்தி (கனடா), சூசீகலா (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்பு மாமனும், சௌமி, (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி), கிரிஷான் (கொழும்பு), சஞ்சுதா (கனடா), சிந்துஜா (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-03-94) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் 12.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இரஞ்சிதமலர்
(மகள்)

விழுசிட்டி,
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

(30095)

## ஈழ அகதிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
முன்னர் இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பிய இந்த அகதிகள் வவுனியாவில் சிதம்பரபுரம் என்ற இடத்தில் ஐ.நா. அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் கடந்த 24 ஆம் திகதி திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டு நரோமா சப்பல் மூலம் நேற்று பருத்தித்துறைக்கு அழைத்து வரப்பட்டனர்.

(இ-5-87-173)

## காளிகாதேவி ஆலயம்
மல்லாகம்
### சங்காபிஷேக விழா (27.3.94)

சரணம் ஈஸ்வரி சரணம் ஈஸ்வரி
சரணம் ஈஸ்வரி தேவி சரணம் ஈஸ்வரி...

திரிபுரசுந்தரி திரிபுரசுந்தரி
சரணம் ஈஸ்வரி தேவி சரணம் ஈஸ்வரி...

சண்பகம்முல்லை பாரியாதமும்
குலுங்கும் மல்லையில் அமர்ந்தகாளியே
பங்குனித் திங்கள் உத்தரத்திலே
பால் நெய் தேனுடன் பஞ்சாமிர்தங்கொண்டு
அம்பிகையுனை அபிஷேகம்செய்திட
வெந்துயர்மாள அருள்புரிவாயே...
— சரணம் ஈஸ்வரி

பொன்பொருள்சுகம் மங்கையர்வசம்
கண்டுளம்மிக வருந்திடாமலுன்
நெஞ்சதில்கைகள் தங்குபங்கயம்
தந்தருள் நிதம் அம்பிகைத்தாயே...
சரணம் ஈஸ்வரி

— க. நாகேந்திரன்

மு. அற்புததேவன்
மல்லாகம்.

## மரண அறிவித்தல்கள்

### வைத்தி கந்தையா

மானிப்பாயை பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான வைத்தி கந்தையா நேற்று (24-03-94) கொழும்பில் காலமானார்.

அன்னார் நேசம்மாவின் அன்புக் கணவரும், வினோதினி, காலஞ்சென்ற விமலரத்ணம், விமலாதேவி (பிரான்ஸ்), குலரட்ணம் (பிரான்ஸ்), விஜயரட்ணம் (கொழும்பு), பேரின்பரட்ணம் (பிரான்ஸ்), சிவரட்ணம் (சுவிஸ்), பரமரட்ணம் (பிரான்ஸ்), விஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைச்சாமி, வேதநாயகம், செல்வலிங்கம், ராணி, சூரியகலா, வசந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

தகவல்:
திருமதி துரைசாமி வினோதினி
(மகள்)

2/1, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(30099)

### வல்லிபுரம் விவேகானந்தன்
(சின்ராஸ்)

இல. 2 சிறாம்பியடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட வல்லிபுரம் விவேகானந்தன் 26-3-94 இல் காலமாகிவிட்டார்.

இவர் வல்லிபுரம் சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், மீரா, நிருபன், சஜன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், சுப்பிரமணியம், செல்வராணி ஆகியோரின் மருமகனும், செல்வானந்தன், சிவானந்தன், புனிதவதி, பரமானந்தம், பாலாம்பிகை, பாலலெட்சுமி, பத்மாவதி, மனோன்மணி ஆகியோரின் அன்புச்சகோதரனும், ஞானசரஸ்வதி, ரஞ்சினி, சச்சிதானந்தம், நித்தியலெட்சுமி, சிவபாதசுந்தரம், விக்னேஸ்வரன், பாலசுப்பிரமணியம், செல்வராஜா, சரோஜினி, மாலினி, புவேந்திரன், மகேந்திரன், பத்மினி, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் கோம்பயன்மணல் மயானத்தில் இன்று 27-3-94 பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலைத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்:-
திருமதி சிவானந்தன்
[மைத்துனி]

இலக்கம் 2,
சிறாம்பியடி,
யாழ்ப்பாணம்.

சிவா மில்
46/1, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.

[30108]

## ஆலயங்களில்

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் கோயிலின் பங்குனி உத்தரத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இதில் "பங்குனி உத்தரம் தத்துவம்" என்னும் பொருள் பற்றி யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. க. நாகேஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

[க-162]

★ ★ ★

அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை 11 மணிக்கு பங்குனி உத்தர உற்சவம் நடைபெறும். 29 ஆம் திகதி காலை ருத்ராபிஷேகமும் முருகப்பெருமான் மணவாளக் கோல உற்சவமும் இடம் பெறும்.

[க]

★ ★ ★

திருநெல்வேலி சிவன் கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிசேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

[க-111]

★ ★ ★

அகில இலங்கை திருமறை மன்றத்தினர் யாழ் கந்தர்மடம் ஆத்திசூடி வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நடத்திவரும் பெரியபுராண படன விரிவுரை பூர்த்தி வைபவம் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் இடம் பெறும்.

இதில் பெளராணிகர் கௌரவிப்பு, பண்ணிசை, சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-162)

★ ★ ★

நுணாவில் கிழக்கு கந்தசாமி கோவில் இசை அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு கனகசபாபதி—சேயோனின் இசைக்கச்சேரி நடைபெறும்.

(க-81)

★ ★ ★

இலமையாணன் உடுப்பிட்டி பெரியதம்பிரான் (வேல்) ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிறு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

[த]

★ ★ ★

தாவடி தெற்கு பத்திரகாளியா சமேத ஸ்ரீ ஞான வைரவ ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிறு காலை 9 மணிக்கு நடைபெறும்.

[த]

★ ★ ★

வரணவாய் முதனைக்குழி முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இறுதி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு 'கிழவியும் குழவியும்' என்ற தலைப்பில் செல்வி குமுதினி தங்கவேல் சமயச் சொற்பொழிவாற்றுவார். (க-17)

## இனவாத---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
உண்டு என்பதை தென் மாகாணசபைத் தேர்தலில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டிய இன்னொரு பாடமாகும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [இ எ-6]


NATIONAL CERTIFICATE IN ENGLISH
(N.C.E) Part - 1
LUXINTENEBRIS
CLASSES ON MONDAYS AND FRIDAYS 3 TO 4 30 P M.
Commencement: 28. 03. 1994
Lectures: KANDIAH NAVARENDRAN



இன்று இறுதி நாள் 27-03-94
யேசு மறை சாற்றி நிற்கும்...... இன்பத் தமிழ் இலக்கியம்
திருமறைக் கலாமன்றம்
வழங்கும்
"கல்வாரிக் கலம்பகம்"
பக்தி, இசை, உரை நாடகம்
இரண்டு காட்சிகள் [ மாலை -- 6-45 மணி
இரவு -- 9.00 மணி
மன்ற அரங்கு யாழ்ப்பாணம்
(இ-7615)


## மரண அறிவித்தல்கள்

நயினாதீவு

### இராமசாமிப்பிள்ளை செல்வராஜா

(மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை - வவுனியா)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 2 சுவாட்ஸ் வீதி, கண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமிப்பிள்ளை செல்வராஜா 24-3-94 இல் அகால மரணமானார்.

அன்னார் நிற்செலாராணியின் அன்புக்கணவரும், ரமேஷ் (லண்டன்), பாமினி, நிரோஷ் (மாணவன், யா/ பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான இராமசாமிப்பிள்ளை, அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அருணானந்தம் பேரன்பேட்டின் அன்பு மருமகனும் நடராஜா(வர்த்தகர் கொழும்பு) சுந்தரேஸ்வரி, தியாகராசா (ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி), இரத்தினராஜா (நில அளவையாளர்), காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயானந்தம், நிர்மலா (நியூசிலாந்து), மகேந்திரா, அருள்மலர் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெந்தா, வனஜா, மேரி (சாம்பியா), கருணாகரன் (கணக்காளர், கொழும்பு), பூமலர் (இளைப்பாறிய ஆசிரியை), நடராஜா (இளைப்பாறிய எழுதுவினைஞர்), இராசம்மா, இராஜேஸ்வரி (யாழ். பிரதேச செயலகம்), சண்முகநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), சந்திரசேகரம் (நில அளவையாளர்) வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்றா (நில அளவையாளர், (நியூசிலாந்து), அருளானந்தம் (பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), பீற்றர் (ஜேர்மனி), விஜயகோன் (முல்லைத்தீவு), அருமைநாயகம் (முகாமையாளர் இலங்கைவங்கி, காங்கேசன்துறை), பொக்கோ (கணக்காளர் சாம்பியா) ஆகியோரின் சகலனும் செல்வநாயகி, நிஷானியின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 28-03-94 திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து கண்டிக்குளி பரிசுத்த புவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் நல்லடக்கத்துக்காக யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நிற்செலாராணி செல்வராஜா
(மனைவி)
இ. இரத்தினராஜா
(சகோதரன்)

இலக்கம் 2
சுவாட்ஸ் வீதி,
கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(30103)

### திரு. இராசா விஜயசுந்தரம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட சுகாதார பரிசோத (S P. H I) சுரும் சூரோல் (SUROL) நிர்வாக உத்தியோகத்தரும்)

மானிப்பாயைச் சேர்ந்த திரு. இராசாவிஜயசுந்தரம் 26-03-1994 அதிகாலை காலமானார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயக்குமார் (முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபனம்), இராஜ்குமார் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை — கொழும்பு), றஞ்சன்குமார் (முன்னாள் இ. பி. ச — லங்கா ரான்ஸ் போமர்ஸ் - டுபாய்), ஜீவன்குமார் (லங்கா சிமெந்து), இ. ஜயந்தி, கலைவாணி, இரவீந்திரக்குமார் (அஸ்பெஸ்டஸ் சிமெந்து தொழிற்சாலை — இரத்மலானை) ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. இராசநாதன் (றோயல் கல்லூரி), வசந்தாதேவி, புவனேஸ்வரி, கனகசோதி (டுபாய்), சரஸ்வதி, வனிதா ஆகியோரின் அன்பு மாமனாரும் கிருஷ்ணி, கிருஷ்ணரூபன், கிருஷாந்த், தர்சினி, ரேணுகா, தர்ஷன், விராஜ், விஜெய், சுரேன், சுனேஸ், இராகேஷ், கிருஷ்ணா, சர்மிளா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு இன்று (27-3-1994) காலை 10.00 மணியளவில் "தங்கவில்லா" 128, யாழ் வீதி, மானிப்பாயிலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. ஜெயக்குமார்
250/1 கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

"தங்கவில்லா,"
128, யாழ் வீதி,
மானிப்பாய்.

(30101)

### கந்தையா கணபதிப்பிள்ளை
(புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம்)

நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்டவரும், புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 313 பாங்சல் வீதியில் வசித்து வந்தவருமாகிய கந்தையா கணபதிப்பிள்ளை 25-03-94 அன்று அகால மரணமானார்.

அன்னார் சிவகாமசுந்தரியின் (திலகம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கதிரவேலு - செல்லத்தங்கம் ஆகியோரின் மருமகனும், சிவதாசன், கவிதாசன், கண்ணதாசன்; வரததாசன், பாரதிதாசன், றாஜினி, சுகந்தினி (கிளிநொச்சி), யேந்தினி (இந்தியா), சிவகஜினி, பிறேமினி ஆகியோரின் அன்புத் தந்தையும் அற்புதமலர், சிவகலை, கமலேந்திரவதி, காலஞ்சென்ற செல்வரட்ணம் சந்திரமோகன் (C. M. சுகந்தினி உரிமையாளர்), விக்னேஸ்வரன் (இந்தியா) ஆகியோரின் மாமனாரும், குருநாதிப்பிள்ளை, நாகம்மா ஆகியோரின் சகோதரரும், பாக்கியம், கமலம், பவளக்கொடி, தவம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-3-94) காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை அன்னாரின் உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

313, பாங்சால் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

(30102)

இப்பத்திரிகை திரு. உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 508/8 இல் [illegible] அச்சகத்தில் 27 03 1994 இல் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org